KALANILAYAM. தனிப்பிரதி ரு. 0 3 0

# கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளி வரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரு. 7 8 0
புற நாடு ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ஹு மேமீ 30உ [No. 22.

OFFICE OF THE REG... 1929 ... MADRAS

பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader) | 421 |
| 2. | அப்பர் E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. | 423 |
| 3. | ஏமாங்கதத் திளவரசன் (A Novel) T. N. சேஷாசலம் B.A., B.L. | 425 |
| 4. | குலசேகரர் T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. | 428 |
| 5. | தமிழ்ப் பாடம் | 430 |
| 6. | மாறன் பாப் பாவினம் (K. நாராயண ரெட்டிகாரு அனுப்பிய பிரதி) | 432 |
| 7. | கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A, B. L. | 435 |
| 8. | பழமுதிர்சோலை—"சுபரி" | 437 |
| 9 | வர்த்தமானம் | 439 |


சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமாலுைம் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினங்கு தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி.யில் அனுப்ப இயலாது. . மானேஜர்.

18057

## கலா நிலயம்

### சொற்றொடராரவாரம்

I

"உடைமைக் கவாவியுழலும் நசைவேறு, உளவாக்க வேண்டுமெனுந் திப்பிய ஊக்கம் வேறு. முன்னது யாக்கையின் பேய்மை, பின்னது உயிரின் நோக்கம். இவ்விரண்டிற்கு முள்ள வுயர்வுஇழிவுகளைப் பகுத்தறிந் துணராமலொன்றோடு மற்றொன்றை மயங்குவதால் மாந்தர் பெரிதும் மாழ்குகின்றனர்" என்ற கருத்துடைய மொழிகளைக் கணித சாத்திரத் தேர்ச்சியால் தர்க்கமுறை நுணுக்கங்களில் நன்கு பயின்று, பொய்த்தோற்றத்தினின்று மெய்ந்நிலையைப் பிரித்தறியும் தத்துவக் காட்சிவாய்ந்த மேனாட்டு நிபுணர் பெர்ட்ராண்ட் ரஸ்ஸெல்(Bertrand Russell) என்பவர், ஐரோப்பிய யுத்தத்தின் முடிவில், சர்வதேச சமாதான சுயேச்சா மகாநாட்டின் முன் (The International Congress for Peace and Freedom) பேசினார். இவ் வாசகத்தின் பொருள் நுண்ணியதேனும் உன்னுங்கால் உணர்தற் கெளியதே. உன்னித்துணிந்த விதன் றூண்டுகையால் நாம் திறந்த கண்ணிரண்டும் செவியிரண்டுங் கொண்டு, இந்நாள் நிகழ்கின்ற சில பொதுஜன இயக்கங்களிடையொதுங்கி ஒற்றுவோமாயின், மாழ்குவோர் மாழ்குதற் குற்றவொரு காரணத்தி னுண்மை யிதுவேயென்னத் தெரியக் காணலாம். வாய்வன்மை மிக வாய்க்கிருத்தலாலேயே ஒருவர் மற்றவர்க்கு வழிகாட்டியாதற்குரியவ ராகார். செய்கையால் சீரியராயிருப்போர் போற்றுதற்கேற்றவரே; சீரியவச் செய்கைகள் பெரும்பான்மை அவர்களது அறிவினுடைய ஆழத்தினின் றெழுந்து நிகழவும் நிகழலாம்; எனினும், தூய்மையாய செயலே பூண்டவரும், பிறர்க்கு இது நலமென நவில்கின்ற முறைகளனைத்தும் எக்காலமும் நேரிதேயா யிருத்தல்வேண்டு மென்ற நியதி யிலது. உலகத்தை ஒருதுறை சேர்க்கமுயல்வோர், அறிவின் ஆழம் அகலம் நுண்மை ஆதிய தன்மைகள் வாய்த்திராதாராயின், அன்னார் உய்க்குநெறி உண்மை நெறியென விரைவினில் மதித்துத் தொடர்தற் கிசைபவர் என்படார். நோயின் வகையேனும் அதற்குரிய மருந்தின் முறையேனும் அறிகின்ற பயிற்சியிலான் ஒருவன், "நும் நோயுமிது, அதற்கு மருந்து மிது" என்று, பரிவினாலாதல், பெருமையின்பால் விழைவினாலாதல், மற்றுத் தன் கைச் 'சரக்கு' விலையாகும் பொருட்டாதல், வாய் வன்மையால் நம்பவைத்துத் தருவானாயின், அம்மருந்தினை யருந்தும் பேதையர்களைக் காப்பது கடவுளுக்கு மருமையாம். நோயும் மருந்தும் அறிந்திருந்தும் தம்முடைய சுயலாப நோக்கங்களால் நஞ்சையே எடுத்துப் புகட்டும் வன்னெஞ்சத் துரோகிகளும் உளர். கடையாயவிக் கயவரிடக்கக் குணநலமும் செயலுயர்வும் உடையோரேனும், மருத்துவ அறிவு இலரேல் அன்பினால் அளிக்கும் அவர் கை மருந்தும் ஆபத்திற் கிடமானதே. எனின், ஒரு நாட்டினரை வகுப்பினரை நன்னிலைக்குக் கொணருமாறு முயல்வோர்தம்முள், அறிவு

ஒழுக்கம் இரண்டும் ஒருங்கே அமைந்திராதவர் உரையும் முறையும் உண்மைநெறி யுய்க்கமாட்டா. ஒழுக்கம் யாதென யாவரும் அறிவார். அறிவென்பது ஆரவாரஞ் செய்வதுமாத்திரம் அன்று என்பதைத் தேர்தல்வேண்டும்.

'தன் வரையில் தான்' என்று பாவிக்கும் ஒரு மனப்பான்மையால் தனித்தனி பிரிந்து ஆன்மநினைவின்றி வாழ்நாளை வேளாண்மை செய்யப்புகும் நோக்கமுடையது மேனாட்டோர் பயில்கின்ற நாகரிகம். லோகாயதத்திற்கு விளைநிலமாய இந்நாகரிகத்தால் தனக்கும் பிறர்க்கும் பொதுஜனங்களுக்கும் நேர்கின்ற தீமைகளையும் துன்பங்களையுங் காண்கின்றோம். அங்கிருந்தே கண்டுள மேனாட்டுப்புலவர் சிலரது பொய்பாத மொழிகளையும் முன்னிங்கு எடுத்து வரைந்தும் உளோம். அந்நாடுகளை உழக்கும் பிணி அதுவாயிருக்க, ஒட்டுவாரொட்டியாகிய அதனைப்பற்றியதால் வருந்துகின்ற இந்நாட்டினர்க்கு மீண்டும்மீண்டும் அப்பிணியையே மருந்தென ஊட்டப்புகுவது ஒப்புரவறிந்து செய்வதாகுமோ. தன்னேய்க்குத் தானே மருந்து ஆவது அணியிழைதிறத்தே யுளதென்பதை மறந்து, புறத்துறைகளிலும் இம்முறையைக் கடைபிடிக்கின்றனர் பலர். இப்பிணிகளுக்கு இட்டழைக்கும் பெயர்களிற் சிறிது வேறுபாடு இருக்கலாம். ஆயினும் என்! பேரில் ஒரு ஜாலமும் இல்லை. பாம்பென்று பயப்படுங்கால், "ஐய, அஞ்சேல். நல்லபாம்பு இது நீகொண்டாடற்பாலது" என்றவுரைகளால் தேறிக் கொள்வதுபோலாம் லோகாயதப் பிணிக்குச் செல்வவளர்ச்சி சுதந்தரதாகம் முதலிய பேர்களை இட்டெடுத்துப் பாராட்டுகின்ற செயல். விடுதலை என்பது ஒன்றினையுஞ் சாராமல் நிற்கவல்ல நிலையன்று. இரவீந்திரநாதர் உரைக்கும் வண்ணம், "யாவரும் எங்கும் ஒருவரோடொருவர் இணங்கிச் சார்ந்து அமைகின்ற தன்மையே" யாம். இடையே ஊடுருவி இணைக்கின்ற நூல் கடவுளின் நினைவு. அன்னதனைப் பிரிந்துவிட்டுச் சுயேச்சை வேண்டுகின்ற மணிகள், ஆரமெனும் பேரழகு அழிந்து தனித்தனி தரையில் உருளலாகின்றன.

நம்மனோர் நிலைமை இருக்குமாறு இவ்வாறு. சமையல் செய்வதற்கு ஒரு ஆள் தேவையாயின், அத்தொழிலில் அவனுக்கிருக்கும் ஆற்றலையும் அவனது ஒழுக்க வழக்கங்களையும் பற்றிப் பலபட ஆராயாது அமர்த்திக்கொள்ள இசையாத மாந்தர், பொதுஜன நன்மைக்கென்று பற்பல முறைகளையும் சீர்திருத்தங்களையும் போதிக்க வருகின்றவரது நற்சாட்சிப் பத்திரங்களைப் பரிசோதிக்காதது ஏனோ தெரிந்திலது. தன்னுடைய நாவிற்கு நற்சுவை வேண்டும்போது செய்கின்ற ஆராய்ச்சியில் ஒரு சிறிதும் தேச நன்மையை மேற்கொண்டு பேசுவோர் திறத்தில் நாம்செய்கின்றதில்லையே. பொதுஜனங்களுக்கு எதுவும் போதும் என்ற நீர்மையோவிது! ஆயுர்வேத ஔடத முறைகளின் சிறப்பைப் பொதுஜனங்கள்பொருட்டு எடுத்து வாதிப்பவரனைவரும் தம்முடைய நோய்க்குப் பெரும்பாலும் ஆங்கில வைத்தியரையே நாடுவது புதியதன்று ; இவ்வித மனப்பான்மைக்கு நல்லதோர் உதாரணமு மாகும்.

சொல்லால் முழக்கிலோ சுகமில்லை. நோக்கமும் செய்கையும் தூய்மையவாய் இருப்பின், அவ்வாறு இருக்கப்பெற்றோர் பெரியோர் எனப் போற்றுதற்குரியவராவர். அவர்களுடன் நெருங்கிப் பயில்வோர் தம் வாழ்க்கை தூய்மையடையலாம். எனினும், பொதுஜன நலத்தையுன்னி அவர் வகுத்துக்காட்டும் நெறி நேரிதாயும் நினைத்த இடத்திற் குப்கத் தக்கதாயும் அமையினும் அமையலாம், அமையாமற் கழியினும் கழியலாம். முன்னைய சரித்திரத்தையும் இற்றைநாள் தன்மையையும் இனி எய்த விழைவதற்குரிய நிலையையும் நன்கு ஆராய்ந்து, மானுடஇயற்கைக்கும் நிரந்தர வாய்மைகளுக்கும் இணங்கிய நெறியினை எடுத்து ஓதுவதற்கு இயன்ற புத்திமான்களது உரைகளே எல்லாப்படியாலும் சாலச் சிறந்தன. சொல்லாளர் செய்கையாளர் யாவரும் சிந்தனையாளர்களுக்குப் பின்னணியில் நிற்றலே முறை. "இந்நிலையில் நாம் செய்யத்தக்கது இதுவே என்று நினைக்கின்றேன்" என நால்வர்க்கு முன்னின்று சொல்லத்துணிபவர்கள் எல்லாரும் சிந்தனையாளர்க ளாகிவிட மாட்டார். பொதுஜனங்கள் அவர் சொற்களைக் கொண்டாடுவது மட்டுமே, அவை சிந்தனையால் தேர்ந்து செப்பப்பெற்றவை என்பதற்கு அறிகுறி யாகாது. ஒருவர் சிந்தனையாள ராவதற்குச் சாதனங்கள் பல வேண்டும். அவைகளுள் முதலாவது கல்வி. கல்லாதான் கோட்டிகொளல் பயனின்றும். கைத்தொழில் வாய்த்தொழில்களுக்குரிய பயிற்சி கல்வியாகாதெனக் கலாநிலயம் பலசால் கூறிவருவதற் கிணங்க இங்குக்குறிப்பது மெய்க்கல்வி யென்பதை மறத்தலாகாது. கணிதம் தர்க்கம் அனைய சாத்திரங்களின் ஆராய்ச்சியால் மனமானது ஒழுங்குமுறை பிறழாமல் ஒன்றினைப்பற்றிச் சிந்திக்கப் பயின்றுளார்தம் சிந்தனைகளே அப்பெயரிற்கு உரியனவாம். இவைகளோடு கூரிய புத்தியும் நல்லுணர்வும் அனுபவ அறிவும் உடையார்தாமே சிந்தனையாளர்க ளாவார். இவைகளின் காரியமாய் விழுமிய ஒழுக்கங்களும் அவர்பால் காணப்பெறும்.

இந்த இலக்கணங்களுக்கு இணங்கியபடி உலகம் உய்வதற்குரிய சில நெறிகளைச் சிந்தித்துச் செப்பவல்லார் என்றைக்குஞ் சிற்சிலர் இருப்பர். உலகத்தில் இந்நாள் புத்திநுட்பத்தால் ஒருதனி யோங்கி நிற்கும் கணிதசாத்திர விற்பன்னர் ஈன்ஸ்டீன் (Einstein) என்பவர்க்கே இணையான லார்ட் ஹால்டேன் (Lord Haldane) என்பவரும், கருத்துமுற்றக் கலைகளைத்துய்த்துயர்ந்த இரவீந்திரநாதரும், கலைகளோடு உபநிடதாதி மறையறிவும் தத்துவ ஆராய்ச்சியும் யோகப் பயிற்சியும் வாய்ந்த ஸ்ரீ அரவிந்தரும், கார்லைல் எமர்ஸன் போன்ற அகன்ற கல்வியும் ஆழ்ந்த அறிவும் உடையவர்களும், இங்குமுன் குறித்த பெர்ட்ராண்ட் ரஸ்ஸேலும், இவர் போன்ற இன்னு மொருசிலரும் சிந்திக்குந் திறத்தினுல் மக்களுள் முதன்மைபெற்ற மேன்மையோ ராவார். தற்கால நிலையைக் கருத்துட்கொண்டு ஆராய்ச்சிசெய்து தக்க நெறிமுறைகளை நவின்றுளாராதலால் இவர்களைமாத்திரம்இங்குக் குறிப்பிடலாயினேம். எக்காலத்திற்கும் இயன்றவைகளைச் சோதித்துச் சாச்வத வாய்மைகளை அருள்புரிந்துள்ள திருவள்ளுவரும், உபநிடதமுடைய முனிவரர்களும் எண்ணில் பல்வேறு சமயக்குரவர்களும் தாயுமானவரனைய வேதாந்த சித்தாந்த சமரசநன்னிலை முன்னிய தத்துவ ஞானிகளும், சிந்தனையாளர்களென்று செப்புவதும் மிகை. சிந்தனைத் திறத்தினுல் உறுதி காண்பவர்களுக்குள் 'காலத்திற்கேற்ற கோலம்' என்ற கொள்கையிலது. தற்காலத்தவரென்று நாம் முதலில் உரைத்த வகுப்பினர்க்கும், முற்காலத்தவரென்று



பின்பிரித்த வகுப்பினர்க்கும் இடையே, பெரும்பான்மை மூலதத்துவங்களின் ஒற்றுமையைக் காணலாம். ஆயினும் அன்னவாறு ஒப்புநோக்குதல் இங்கு நம் கருத்தன்று. தற்கால நாகரிகப்போக்குவரவு தெரிந்து, மனிதரை இன்று இயக்குகின்ற நோக்கங்களின் தன்மையையும் உணர்ந்து, இன்ன நோக்கமும் அன்ன போக்குவரவும் அந்தத்தில் என்னவகை முடியும் என்பதையும் ஓர்ந்து உரைத்திருக்கின்றாராதலால் இக்கட்டுரையின்பொருட்டு ஹால்டேன்முதல் ரஸ்ஸெல் ஈறுகவுள்ள அத்தொகுதியினரை முதலாகக் கூறலாயினேம்.

கூறுவதெல்லாம் எற்றுக்கு? திருவள்ளுவமாலையிற் கண்ட செய்யுள்கள் ஒவ்வொன்றிலும் இவ்விரண்டடிகளை எடுத்துச்சொல்லி, " அத்தகைய வள்ளுவர் வாழ்ந்த நாடன்றோ விது ! அரவிந்தர் பிறந்தநாடு ! கலைகளுக் களித்த உலகப் பரிசுபெற்ற இரவீந்திரர் இருக்கும் நாடு!" என்று வாசாகைங்கரியம் செய்வதற்கும் செய்விப்பதற்கு மன்று. (தொடரும்)

THE REGIST... 1929 MADRAS

# அப்பர்

## 4. பெரியபுராணத்தில் காணுத திருப்பதிகளில் அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பங்களும்

2. தஞ்சைஜில்லாத் திருப்பதிகளின் முற்பகுதி.
சீர்காழியில் அப்பர் பாடியது முதல்
திருப்பழையாறையில் சமணழித்த வரையில்.

4. நான்காம் தொகுதி

இனி ஆடுதுறை ஸ்டேஷன்மார்க்கத்திலுள்ள திருக்கருவிலி, திருவன்னியூர் (அன்னூர்) என்னும் தலங்களில் அப்பர் பாடிய பதிகங்களைக் காண்போம்: —

405 பக்கத் தொடர்ச்சி

15. திருக்கருவி யென்பது, திருக்கருவிலியூரென்றும் திருக்கருவிலிக் கொட்டிட்டை என்றும் பிரதி பேதங்களில் காணப்படும். இவ்வூர் அப்பர்காலத்தில் சைவம் மலிந்த ஊராய்க் காணப்படுகின்றது. இதனில் பத்து பாசுரங்களமைந்த திருக்குறுந்தொகைப் பதிகம் ஒன்றே திருமுறையில் காண்கின்றோம். அப்பதிகம் முற்றும் மனிதருக்கு * இதோபதேசமாய்க் "காலன் வரும் முன்னர்க் காலகாலனை வணங்குமின். பிணி, பிறவி, பழவினை யற்றுப்போம்" என்னும் உறுதியை உதாரணங்களுடன் விளக்கும். மனிதர் உய்யும்வகை உள்ளங்கை நெல்லிக்கனியெனத் திருக்கருவிலித் திருக்குறுந்தொகை யெடுத்துக்காட்டும். †.

(16) திருவன்னியூர் என்னும் நகரம் அப்பர் காலத்தில் மாட மாமதிள் சூழ்ந்ததென்றும் ‡, அவ்விடத்தில் வசிப்போர் பேசுவது வேதமென்றும் ¶ அவ்வூர்த் தாமரை வயல்களில் கயல் பாயவும், அயலில் அன்னங்கள் மேயவும்‡, இத்தகை நீர்வளம் நிலவளம் குடிவளம் பொருந்திய தானங்களிற் சிறந்த இந்த ஊரையடைவோர் ஞானத்தை அடைவாரென்றும், அப்பர் கூறுகிறார் $. அப்பதியில் காலையில் நடக்கும் சிவபூசை கண்டுகளித்தே அப்பர் அதன் 7-ம் பாசுரம் பாடினார்போலும். இணங்குவார்க் கினியான் நினைப்பவர் வினைதீர்ப்பா னென்றும், அவனை வழுத்தி இம்மை மறுமை யிரண்டிலும் செம்மை யடையலாமென்றும் கூறுகின்றார் ¶.

இப்பதிகத்தின் 9-ம் பாசுரம் வான்மீகத்திற்கு இரையாயிற்று. ஏனைய 9-பாசுரங்களே அடையலானேம். + இவ்வூரில் சம்பந்தர் சுந்தரர் பாடல்கள் திருமுறைகளில் இல.

5 ஐந்தாம் தொகுதி

இனிக் கும்பகோணம்ஸ்டேஷன் மார்க்கத்திலுள்ள இத்தகைய திருப்பதிகளைக் காண்போம். அவை யாவன:—

(17) திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் *(18) திருக்கொட்டையூர் †(19) திருக்கடுவாய்க்கரைப்புத்தூர்

---

* (i) ஆற்ற வும்மவ லத்தமுந் தாதுநீர்
தோற்றந் தீயொடு நீர்நிலந் தூவெளி
காற்று மாகின் றான்றன் கருவிலிக்
கூற்றங் காய்ந்தவன் கொட்டிட்டை சேர்மினே
திருக்கருவிலி—திருக்குறுந்தொகை 6.

(ii) நில்லா வாழ்வு நிலைபெறு மென்றெண்ணிப்
பொல்லா வாறு செயப்புரி யாதுநீர்
கல்லா ரும்மதின் சூழ்தண் கருவிலிக்
கொல்லே றூர்பவன் கொட்டிட்டை சேர்மினே
ஷை 7.

† மேற்கண்ட திருநல்லத்திலிருந்து தென்மேற்கே 2½ மைலில் திருக்கருவிலி யிருக்கிறது. இது திருச்சேறைக்கு 9மைல் மேற்கு. ஆடுதுறையே இதற்குச் சமீபமான ரயில்வே ஸ்டேஷன்.

‡ திருவன்னியூர்-திருக்குறுந்தொகை பாசுரம்—(வரி 3-4)
¶ ஷை ஷை 5 (வரி-4)
‡ ஷை ஷை 8 (வரி 3-4)
$ ஷை 3.ம் பாசுரம்
¶ இம்மை யம்மை யெனவிரண் டும்மிவை
செம்மை தானறி யாதுவி ளம்புவர்
மெய்ம்மை யானினை வார்கடம் வல்வினை
வெம்மின் றீர்ப்பர்கண் டீர்வன்னி யூரரே.
திருவன்னியூர்-திருக்குறுந்தொகை 4.

+ திருநல்லம்என்னும் கோனேரிராஜபுரத்திற்குத் தென்கிழக்கே 2 மைலில், பூந்தோட்டம் ஸ்டேஷனிலிருந்து 1½ மைலில் வடமேற்கில் திருவன்னியூர் இருக்கின்றது.

* கும்பகோணம் ஸ்டேஷனுக்கு ½ மைலில் மகாமகம் குள வடகரையில் திருக்குடந்தைக் காரோணம் என்கிற காசி விச்வநாதர் கோயிலிருக்கிறது. இது திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது. இதற்கு மேற்கே ¼ மைலில் திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் என்னும் (மடந்தையார்கோயில்) ஸ்ரீ நாகேச்வரன்கோயில் காணப்படும். [இதினின்று மேற்கே கால்மைலில் திருக்குடமூக்கு என்கிற கும்பேச்வரர் கோயில் இருக்கிறது]

† கும்பகோணம் ஸ்டேஷனிலிருந்து காவிரி வடகரைச் சற்சாலை மார்க்கமாய் 3மைலில் திருக்கொட்டையூர் இருக்கிறது. இதனின்று வடமேற்கே 1¼மைலில் இன்னம்பூர் என்னும் திருவின்னம்பரும், அதினின்று வடக்கே 2மை

‡ (20) திருச்சிவ புரம் $ (21) திரு அரிசிற்கரைப்புத்தூர் ¶ (22) திருப்புறம்பயம் (23) திரு விசயமங்கை (24) திருவின்னம்பர் என்பன.

(17) திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம்:—இதில் அப்பர் பாடிய திருத்தாண்டகப்பதிகம் 11பாசுரங்கள் அமைந்தது ஒன்றே திருமுறையிலிருக்கின்றது. இதில் மூர்த்தி *, தலம் †, தீர்த்தம் ‡,இவற்றின் விசேடத்தை நன்கு அறியலாகும். $ இது திருக்குடமூக்குக்கு அப்பர் சென்ற காலத்தில் பாடப்பட்டதென்றே கூறலாம்.

இதன்றியும் திருக்குடமூக்கு அப்பர் சென்றபின்னர் எத்தலங்களைத் தரிசித்தாரோ அத்தலங்களைத்

---

வில் திருப்புறம்பயமும் உள; திருப்புறம்பயத்திலிருந்து மேற்கே ஒரு மைலில் திருவிசயமங்கை யுளது.

‡ கும்பகோணத்திலிருந்து கீடாமங்கலம் கற்சாலையில் 2 மைலில் திருக்கலயநல்லூர். இதினின்று 1 மைல் தெற்கில் திருக்கருக்குடி என்னும் மருதாநல்லூர். இதினின்று தெற்கே 2மைலிலுள்ள வலங்கைமானிலிருந்து கிழக்கே 1மைலில் திருக்கடுவாய்க்கரைப்புத்தூ ரிருக்கின்றது. இதற்குக் கிழக்கே 3½மைலில் திருக்குடவாயல்.

$ திருக்கலயநல்லூரி னின்று (சாக்கோட்டை) வடகிழக்கே 2½மைலில் திருச்சிவபுரம்

¶ சாக்கோட்டையிலிருந்து தென்கிழக்கே 4½மைலில் திரு அரிசிற்கரைப்புத்தூர் என்னும் அழகார்புத்தூர் இருக்கிறது. (இதினின்று தென்கிழக்கே கறையூர் சித்தீச்சரமுளது. இது திருச்சேறைக்கு 3மைல் வடமேற்கு)

* காலன்வலி தொலைத்தகழற் காலர் போலும்
 காமனெழில் அழல்விழுங்கக் கண்டார் போலும்
ஆலதனி லறநால்வர்க் களித்தார் போலும்
 ஆறொடுபெண் ணலியல்ல ரானார் போலும்
நீலவுரு வயிரநிரை பச்சை செம்பொன்
 நெடும்பளிங்கென் றறிவரிய நிறத்தார் போலும்
கோலமணி கொழித்திழியும் பொன்னி நன்னீர்க்
 குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே.
  திருக்குடந்தைக் கீழ்கோட்டம்-திருத்தாண்டகம் 5.

† தக்கனது பெருவேள்வி தகர்த்தார் போலும்
 சந்திரனைக் கலைகவர்ந்து தரித்தார் போலும்
செக்கரொளி பவளவொளி மின்னின் சோதி
 செழுஞ்சுடர்த்தீ ஞாயிறெனச் செய்யர் போலும்
மிக்கதிறன் மறையவரால் விளங்கு வேள்வி
 மிகுபுகைபோய் விண்பொழியக் கழனி யெல்லாம்
கொக்கினிய கனிசிதறித் தேறல் பாயும்
 குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே
  ஷை. 4.

‡ எவிபிடர்க் கட்விடைப்பட் டிருக்கின் றேனை
 இப்பிறவி யறுத்தேற வாங்கி யாங்கே
கூவியம ருலகனைத்து முருவிப் போகக்
 குறியிலறு குணத்தாண்டு கொண்டார் போலும்
தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை
 சரசுவதிபொற் றாமரைபுட் கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த
 குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே. ஷை.19

$ சுந்தரமூர்த்தி நாயனார் திருவாக்கையும் நோக்குக:—
தனிசாலைகள் தவமாவது தம்மைப்பெறி லன்றே
குளியீருளங் குருக்கேத்திரம் கோதாவிரி குமரி
தெளிமீருளஞ் சீபர்ப்பதம் தெற்குவடக் காகக்
கிளிவாழைவொண் கனிகீறியுண் கேதாரமென் னீரே
 —திருக்கேதாரம்-பஞ்-சட்டபாஷை

தரிசிக்கும் எண்ணம் * அவருக்கு அக்காலத்திலிருந்ததும் இதில் வெளியாகின்றது.

இப்பதிகத்தால் அக்காலத்தில் இந்நாட்டு நீர்வளம் நிலவளம் செவ்வனே காணப்படும் †.

(18) திருக்கொட்டையூரில் அப்பர் பாடியது பத்து பாசுரங்களமைந்த ஒரு திருத்தாண்டகப்பதிகமே திருமுறைகளில் உளது. இது பண்முறைத் தேவாரம் பிரதிகளில் "திருவலஞ்சுழியும் திருக்கோட்டையூர்க் கோட்டீச்சரமும்-திருத்தாண்டகம்" என்று கண்டிருப்பினும் சுவாமிநாத பண்டிதர் தலமுறையிற் காட்டியவாறு திருக்கொட்டையூர்த் திருப்பதிகமாய்க் கொள்வதே சிறப்பு. ஒவ்வொரு பாசுரத்திலும் வலஞ்சுழி மன்னு மணாளனைச் சுட்டினும், கொட்டையூரையே 4-வது ¶ வரிகளில், அப்பர் சிறக்கப் பாடினராதலால், இது திருக்கொட்டையூரில் அவர் திருவாய் மலர்ந்தனரென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. அதன் சிவனடியார் குளம்,†சோலை முதலியன மிகவும் மனங்கவருமாறு அப்பர் பாசுரங்களிற் காணலாம்.

‡திருவலஞ்சுழியும் திருக்கொட்டையூரும் அருகிலுள்ள ஊர்களல்ல.ஆயினும் திருக்குடமூக்கை விட்ட

---

* பூச்சூழ்ந்த பொழில்தழுவு புகலூ ருன்னார்
 புறம்பயத்தார் அறம்புரிபூர் துருத்தி புக்கு
மாச்சூழ்ந்த பழனத்தார் நெய்த்தா னத்தார்
 மாதவத்து வளர்சோற்றுத் துறையார் நல்ல
தீச்சூழ்ந்த திகிரிதிரு மாலுக் கீந்து
 திருவானைக் காவிலோர் சிலந்திக் கந்நாள்
கோச்சோழர் குலத்தரசு கொடுத்தார் போலுங்
 குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே.
—திருக்குடந்தைக்கீழ்க் கோட்டம்-திருத்தாண்டகம் 8.

†i. தேனவினந் துவலைமலி தென்றனன் முன்றிற்
 செழும்பொழிற்பூம் பாளைவிரி தேற லூறும்
கூனலினம் பிறைதடவு கொடிகொண் மாடக்
 குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே.
  —ஷை. 2.

ii. மிக்கதிறன் மறையவரால் விளங்கு வேள்வி
 மிகுபுகைபோய் விண்பொழியக் கழனி யெல்லாம்
கொக்கினிய கனிசிதறித் தேறல் பாயுங்
 குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே.
  —ஷை. 4.

¶(i) குருமணிபோ லழகமருங் கொட்டை யூரிற்
 கோடீச் சரத்துறையுங் கோமான் றானே —1.
(ii) குலைத்தெங்கஞ் சோலைசூழ் கொட்டை யூரிற்
 கோடீச் சரத்துறையுங் கோமான் றானே —2.
(iii) கொந்தார் பொழில்புடைசூழ் கொட்டை யூரிற்
 கோடீச் சரத்துறையும் கோமான் றானே —3.
(iv) கொடியாடு நெடுமாடக் கொட்டை யூரிற்
 கோடீச் சரத்துறையுங் கோமான் றானே —4.
(v) கொக்கமரும் வயல்புடைசூழ் கொட்டை யூரிற்
 கோடீச் சரத்துறையுங் கோமான் றானே —5.
(vi) கொண்டறவஞ் கொடிமாடக் கொட்டை யூரில்
 கோடீச் சரத்துறையுங் கோமான் றானே —6.
† குளங்குளிர்செங் குவளைகிளர் கொட்டை யூரிற்
 கோடிச் சரத்துறையுங் கோமான் றானே —ஷை 9

‡ சுந்தரப் பெருமாள்கோயில் ரயில்வே ஸ்டேஷனுக்குக் கிழக்கே மட்சாலை மார்க்கமாய் ஒருமைலில் திருவலஞ்சுழியிருக்கிறது. இதில் அப்பர் பாடிய திருக்குறுந்தொகை பத்து பாசுர மமைந்தது ஒன்று. ஒரு திருத்தாண்டகப் பாசுரம், திருஞான சம்பந்தர் பதிகங்கள்—3, ஆக 5 திருப்பதிகங்கள் திருமுறைகளில் உள.



பிறகு திருவலஞ்சுழி அப்பர்சென்றதாய்ப் பெரியபுராணம்கூறுகின்றது. அப்பர்திருக்கொட்டையூரிற்பாடிய திருத்தாண்டகமும் அவர் திருக்குடமூக்கு முதலிய கும்பகோண ஸ்தலங்கள் பதிகங்களும் திருவலஞ்சுழிப் பதிகங்களும் ஒரு காலத்திய வென்னலாம்.

திருக்கொட்டையூர்த் திருத்தாண்டகத்தில் உள்ள அரிய பெரிய விஷயங்களையே திருவலஞ்சுழித் திருப்பதிகங்களிலும் காண்கின்றோம் *. "கலைபயில்வோர் ஞானக்கண் ணானான் கண்டாய்" என்பதை விளக்குவதுபோல் திருவலஞ்சுழித் திருக்குறுந்தொகை 9-ம் பாசுரம் † நிற்பதுடன், அவ்வூர் நதி ‡ "மலைப் பண்டாங் கொண்டுவரு நீர்ப்பொன்னி" என்றதையே திருவலஞ்சுழித் திருத்தாண்டகம் சிறப்பித்துக் கூறுகின்றது $.

(19) திருக்கடுவாய்க் கரைப்புத்தூர் *. இது ஆண்டார்கோயிலென்று வழங்கும் †. கடுவாய் என்பது ஒரு நதி ‡. புலிகள் அக்காலத்தில் அந்நதியில் வரும்

---

* திருக்கொட்டையூர் திருத்தாண்டகம் 2-வரி 1.

† கண்ப னிக்குங்கை கூப்புங்கண் மூன்றுடை
 நண்ப னுக்கெனை நான்கொடுப் பேனெனும்
 வண்பொ னித்தென் வலஞ்சுழி மேவிய
 பண்ப னிப்பொனைச் செய்த பரிசிதே
  திருவலஞ்சுழி-திருக்குறுந்தொகை 9.

‡ திருக்கொட்டையூர்த் திருத்தாண்டகம் 2-வரி 3.

$ அலையார் புனற்கங்கை நங்கை காண
 அம்பலத்தி லருநட்ட மாடி வேடம்
தொலையாத வென்றியார் நின்றி யூரு
 நெடுங்களமு மேவி விடையை மேல்கொண்டு
இலையார் படைகையி லேந்தி யெங்கு
 மிமையவரு மமையவரு மிறைஞ்சி யேத்த
மலையார் திரளருவிப் பொன்னி சூழ்ந்த
 வலஞ்சுழியே புக்கிடமா மருவி னாரே.
  —திருவலஞ்சுழி-திருத்தாண்டகம்.

*. "கடுவாய்ப்புன லாடிய திருத்தனை" என்று முதல் பாசுரத்திலும்,"திரைக்கொணீர்க் கடுவாய்க்கரைத்தென்புத்தூர்", என்று 10ம்பாசுரத்திலும், மொழிந்ததைக் காண்க. இதைப் புத்தூரென்று அப்பர் முதல் இரண்டு பாசுரங்களில் மொழிகின்றார்.

†. ஆண்டார்கோயில் என்று இப்புத்தூருக்கு வந்த காரணம் ஆராய்ச்சிக்கு இடம்கொடுக்கும் விஷயமாகும்.

‡ பந்த பாசம றுத்தெனை யாட்கொண்ட
 மைந்த னைமண வாளனை மாமலர்க்
 கந்த நீர்க்கடு வாய்க்கரைத் தென்புத்தூர்
 எந்தை யீசனைக் கண்டினி தாயிற்றே —6-ம் பாசுரம்.

செய்கையால் அதைக் கடுவாய்நதி யென்று அழைத்தனரோ, வேறு எக்காரணத்தால் அப்பேர்பெற்றதோ தெரியவில்லை ¶. இத்தலத்திய $ திருக்குறுந்தொகையில் சமணர் தனக்குச் செய்த கொடுமையைக் குறிப்பாய் அப்பர் காட்டுகின்றார். இப்பதிகம் திருநாவுக்கரசு, "போதனத்தி லந்தாதியை"க் கண்டு உய்யப் பெற்றதை வியப்புடன் விரித்துக் காட்டும்.

(20) திருச்சிவபுரம். இதில் அப்பர் பாடிய ஒரு திருத்தாண்டகப் பதிகத்தின் ஒரு பாகமே அடையப் பெற்றோம். இப்பதிகத்தில் 8, 9-ம் பாசுரங்கள் மறைந்தன வாதலால் ஏனைய எட்டு பாசுரங்களே இப்பதிகத்தி லிருக்கின்றன.

இப்பதி பழங்காவிரிக் கரையில் * விளங்கும். கரிகால்வளவன் காவிரிநதிக்கு அணைபோட்ட பின்னர்க் காவிரி கிளைநதிகளாய்ப் பற்பல இடங்களில் பாய நேர்ந்ததுமன்றி, காவிரி பழங்காவிரி யென்னும் நதிகளும் ஏற்பட்டன. திருவிளநகர் முதலிய ஸ்தலங்களைப் பாடும்போது திருஞானசம்பந்தர் பழங்காவிரி யென்றெடுத்துக் காட்டுவார். காவிரியின் கிளையொன்றே அரிசிலா றெனப்படும்.

திருச்சிவபுரத்தில் திகழும் சிவபெருமான் "கருதுவா ரிதயத்துக் கமலத்தூறும் தேனவன்" என்றும் "புவனங்கண் மூன்றினுக்கும் பொருளாய் நின்றதிக்கன்" என்றும் "கலையாரு நூலங்க மாயினான் காண், கலைபயிலுங் கருத்தன் காண்" என்றும் பரவினர் திருநாவுக்கரசர்.

---

¶ இடுவா ரிட்ட கவளங் கவர்ந்திரு
 கடுவா யிட்டவர் கட்டுரை கொள்ளாதே
 கடுவாய்த் தென்கரைப் புத்தூ ரடிகட்காட்
 படவே பெற்றுநான் பாக்கியம் செய்தேனே. —9

$ இத்தலத்தில் அப்பர் திருக்குறுந்தொகை 10 பாசுரங்களமைந்த பதிகம் ஒன்றே திருமுறைகளிற் காண்கின்றோம். இத்தலத்திற்குச் சமீபத்தில் சம்பந்தர் சுந்தரர் சென்றாராயினும் அவர் பதிகங்க ளில்லாமைக்குக் காரணம் காண முடியவில்லை.

*. மண்டையிற் குண்டிகை மாசுதரும்
 மிண்டரை விலக்கிய விமலனகர்
 பண்டமர் தருபழங் காவிரியின்
 தெண்டிரை பொருதெழு சிவபுரமே —சம்பந்தர்

[திருஞான சம்பந்தர் இப்பதியிற் பாடிய பதிகங்கள் மதுரையில் சமணழித்த பின்னர்ப் பாடியவைபோல் காணப்படுகின்றன. இப்பதியில் அப்பரும் சம்பந்தரும் பாடிய பாடல்கள் ஒரு காலத்திய வல்லவெனவும் காணப்படும்.]

# ஏமாங்கதத் திளவரசன்

[By Kind Permission of Messrs. B. G. PAUL & Co., Madras.]

## 5. கோமகன் கனவு

407 பக்கத் தொடர்ச்சி

குலப்பாகன் புறங்காக்கக் கோமகனும் அக்கங்குல் மனத்திற்கினிய இளம்பாவை திருவினைவே துணையாகத் துயிலமர்ந்து இரவைக் கழித்தான். பகல்தொடுத்த போரில் யாதும் அவன் சிந்தனை பயின்றதில்லை. அங்கதன் ஆட்டிவைத்த சூத்திரப் பதுமைபோல், பொங்கிய பூசலூடே வாசவன் புரிந்த யாவும் கனவின்கில் மீண்டும் காணலுமாயினன். கொடுஞ்சிலையைவிட்டு வலவன் கும்பத்தினிமேலுறித் தன் நுதலெனவளைந்த தனுவினோடும் வீரநிர்த்தனம் துளங்கிய தோற்றமே அவனது கனவிலே கலந்த பல்வேறு திறப்பட்ட காட்சிகளுக்கு நடுவிலே இடையறாது நின்றது: "வலவனுக்குப் பின்புறம் ஒதுங்கி நகைத்ததென்ன வலிமுகமா! விண்ணின்று தாழையின் மென்பூ பொழிகின்றதேன்! தாழைமடல் மேய்கின்ற சிங்கமும் உண்டோ! இந்தச் சிங்கத்தின் மீது ஏனிப்புஜங்கள் கூடை கூடையாய் மண்கொட்டிக் குவிக்கின்றான்! சிங்கமுகனும் அவன் முதுகில்

பிரம்பால் அடித்ததேன்! சாரதி இவன் தெறித்த நான் மணங்கமழ் மாலையாய் மலர்ந்த தென்னே!''

இன்னவிதம் முன்னிகழ்ந்த முறைக்கொட்டி இளங்கோவின் கனவு தன்னில், மின்னலெலன மறைந்தெழுந்து மாறிமாறி விகற்பமாய சாயை யெல்லாம், தன்னினைவு வருமளவும் நடமாடித் தளர்ந்தழிந்து நீங்கிப் போகக், கன்னியினை நினைத்த வண்ணம் காலைதானும் கண்விழித்துத் துயிலுணர்ந்தான். அங்கதன் இல்லாக்கால் அற்றைப்போது என்னவாகித் தன் கதி முடிந்திருக்கும் என்பது உறாத்த மனந்தனில் மானமும் மகிழ்ச்சியும் தொடர்ந்துபுக்கு ஒன்றை யொன்று துரத்தின. 'பாகனே போற்றிய யாக்கையைக் கொண்டுபோய் மீண்டும் யான் அப்பஞ்சரவல்லிக்கு ஆளாவதெங்ஙனம்!' என அழுங்குவான் ஒரு வேளை. 'அன்றேல், அப்பாவியர் வாளினால் என்னாவியே போயினால் எவ்வாறு ஆற்றுவாள் அப்பேதை!' என்று தேறுவான் மறுவேளை. 'பொய்த்தந்தை தொடுத்த போரில் தன் மெய்யன்பன் மாண்டனன் என்று கேட்க, அம்மெல்லியல் எரிதழல் பட்டவொரு பைந்தளிரென்ன உடல்சுருண்டு உயிர் உலர்ந்து உலகமே அழவழ உடன்மாள்வள். பெண்ணரசி இவள் நாட்கு இறுதி காணவோ வல்வினையேன் காதலித்தேன்.........என்ன செப்பினேன்! நானிங்கு அழிந்தேனெனும் சுடு சொல்லும் அவள்செவியுள் பாய்ந்து தான் உயிரைப் பருகவேண்டுமோ! என் தோள்தனில் தங்கிய திரு அவள். மருமத்தில் உறையும் மகளும் அவளே. என்மேல் எறிந்த வெவ்வேல் அங்ஙனே அவளையும் போழ்ந்திடாதோ!'' என்று உன்னிய ஆர்வம் மிகுந்த வாசவன், 'பஞ்சரா, எனதினியாய், எங்குளாய்கொல் இக்காலம்? யாது செய்கின்றனையோ? பஞ்சரா,' என வாய்திறந்து விளித்தான்

படமாடத்தின் வாயிலில் படுத்திருந்த அங்கதன் அரைவிழித் தூக்கத்தின் அயர்வினால், "அன்ப, ஏன், நின்னயல் அகலாமல் இருக்கின்றேன்,'' என எதிர்மொழி தந்தனன். நள்ளிரவில் ஒளியிலா அச் சிற்றறையின்கண் தன்னெஞ்சொடு கூறிய சேய்மை வினாவிற்கு எதிர்மாற்றம் தந்தவொலி வாசவனது செவியிற் படுதலும் அவன் பொள்ளெனப் பள்ளிவிட்டெழுந்து, "என்னகத்திலே யமர்ந்த நீ புறத்திலே திரண்டும் பேசவல்லையோ! எங்குளாய், என் செல்வி?'' என்று நாற்புறமும் நோக்கினான். ஒன்றும் காண்கிலன். மீண்டுமவன், "பொய்தலைப் பிரிந்து நீ என்பால் கண்பொத்தி விளையாடப் போர்க்களத்துள் போந்தவிதம் வெகுநன்று. ஒலிக்குரிய ஒளியுருவே வெளிவருவாய்,'' என வேண்டினன். அச்சமயம் படமாடத்தின் புரை மறைத்த திரைத்துணியும் சிறிது விலகியது. மிளிர்தரும் இருவிழிகள் அவ்வழித் தன்னிலை நோக்கிப் புரள்வன வாசவன் கடைக்கண்ணில் கண்டான். காண்டலும், மெல்லெனச் சென்று விளக்கை நந்தினாய்த் திரைவாய் நண்ணுங்கால், அங்கதன் அங்குச் சிக்கென அமளியில் படுத்த துணர்ந்தான். உணர்தலும், அவ்விடம் குறுகி வலவனது வதனத்தைக் கருதி நிற்கக் குறுமுறுவல் வாய்தப்பி வெளியேகக் கூத்தாடியதும், இமைநடுக்குறக் கண்மணி உள்ளே புரண்டதும், ஊரும் எறும்பை உதறுவான்போல் அவன் பொய்த்துயில் மறைப்பதும், யாவும் தேர்ந்தான் வாசவன். தேர்ந்தவாங்கே தன்தேகத்தில் புளகம் போர்க்க, உள்ளமும் ஏம்பலொடு பூரிக்க, இதழிலே இன்னகை யரும்பக், கண்மலர் பனிப்ப, முழங்காற் படியிடத் தாழ்ந்து, அரிமருட்டும் பாலகனைத் தைவருவாள் ஒரு நற்றாயென, அச் சாரதிச்சிறுவனை அருத்தியொடு தலையும் முகமும் தைவந்து பின் தாளையும் வருடினான். இச்செம்மலின் வெய்யவிரல்கள் நடந்த இடந்தோறும் அம் மாய வலவனது மாந்தளிர் மேனியும், என்றும் உணர்ந்திலாப் பரிசத்தின் ஒரு புதுச்சுவை அன்று மாந்தியே மகிழ்ந்தது. பின்னர் வாசவன் அவனது தோள்களை மெல்லக் குலுக்கி "அங்கதா, எழுந்திரு,'' என்றனன். அங்கதன் அசையவில்லை. "உன் தூக்கமே தூங்கிவிட்டது, யானறிவேன் அதனை, இனி நீ எழுந்திரு,'' என்றனன் மீண்டும். இதற்கும் அப்பாகன் பதில் இசைத்திலன். "பொய்யுறக்கமேனும், நீதுயிலுணர்ந்த செவ்வி நோக்கும் ஆர்வத்தால் உழல்கின்றேன். எனதினியாய், பஞ்சரா, எழுந்திராய்,'' என நயந்த குரலோடு நவின்றனன் வாசவன். போலித்தூக்கம் அங்கதனுக்குப் போயிற்றில்லை. கோமகன் காத்த நிறையோ குலைந்தது. குவிந்திருந்த அங்கதனது அதரமலர் நெகிழ்த்தித் தித்திக்கும் முத்தமொன்று வைத்தெழுந்தான். 'இதற்குத்தான் அன்றோ இத்தனைநேரம் காத்திருந்தேன்' என்பாள்போலப் பஞ்சரவல்லியும் நித்திரை கலைந்த பாவனையில் கண்விழித்து, "யாரங்கே, என்ன விது!'' என்று வியந்தனளாய்ப் பாயலைவிட்டு எழுந்தாள்.

"இது பிரபஞ்சம், இருப்பதும் யானே!'' என வாசவன் மீண்டும் அவள் கன்னத்தில் முத்தமிடவே, பஞ்சரவல்லி பிணக்கமுற்றாள்போல் அவனை நொய்தின் விலக்கித், "தலைவ, அடியேன்பால் இவ்வருள் புரிந்த தென்னகருதியோ! தேர்நடத்திய திறத்திற்காயின் அஃது என் கடமையே செய்தவாறன்றோ!'' எனச் சிறிது அகன்றனள்.

"அங்கதக்கோலம் பஞ்சரா, இப்பொழுது அரைக்கோலமே எஞ்சியது. கற்றையங்கூந்தல் நின் முதுகிலே புரள்வதால், நீ யாவளெனப் புறங்கூறிக் கிடக்கின்றதுகாண். நாணமும் நினைக்காது இவ்வாணுடை ஏந்திய என் செல்வி ........................எந்தொல்குல முன்னையோர் முயன்ற தவமெலாந் திரண்டு பெண்ணுருவெடுத்து இந்நாள் என் தேர்முனை அமர்ந்த திருவே...........பஞ்சரவல்லி, ஆண்மை மாசுற இன்று நான் அமர்க்களம் பிழைத்தபின்னும் என்னை நின் திருக்கண் நோக்கம் தீண்டவும் தரிப்பையோ!''

கற்பகம் படருமக் காமவல்லிபோல் இவ்வனிதையும் வாசவன் தோள்களைத் தழுவினாள். தழுவி அவன் இருதயம் துடிக்கும் ஓதையைச் செவியுறக்கேட்டு, அவ்வொலித்திரளிற்கு ஒருபொருள் உணர்ந்தனள் என்னக் கோமகன் முகந்தனை இனிதின் நோக்கிப் "பெரும, உவகைதான் உதிக்கும்போதெல்லாம் அதனுடன் ஒரு சந்தேகமும் பிறக்கவேண்டும் என்னும் விதி மர்மமருத்துவத்தில் செப்பியுளதுபோலும். ஐய, ஐயுறேல். ஓடுவோரை ஒறுக்கவேண்டா வென்று நம் வீரருக்கு உரைத்தபோதன்றோ உனதாண்மை யடங்கலும் எளியளும் கண்டுகொண்டேன். அல்லாமல், இந்த ஆபத்திற்கு உன்னை ஆளாக்கிய பெண்புத்திப் பாவியும் நானே''

"பஞ்சரா, வறிதே பொய்ப்பழி உனக்கே ஏன் தேடிக்கொள்கிறாய்.''

"பழியும் அன்ப, பொய்யன்று. நீ போரிலே மனம் புகாது நடிக்கக் கண்டேன். புஜங்கனும் போர்முனை தோன்றவில்லை. மாலையும் சூழ்ந்தது. நமது சேனையை விட்டுப்பிரித்து உன்னைத் தனியிடம் செலுத்திப் போனால் புஜங்கன் நின்னைப் பற்றிக்கொள்ளும் ஆவலால் வெளிவருவான் என்று எண்ணினேன். நம்முன் ஒருதரம் அவன் வந்துவிடுவானாயின் எவ்வகையிலேனும் நாம் அவனைச் சிறைகொண்டு போகலாம் என்பது எனது துணிபு. ஆனால், அத்தந்திரக் கிழவன் தான் தோன்றாது ஒரு தானையை ஏவினான். இப்பரிக்ஷைக்கு நம்மிருவர் உயிரும் இரையாகுந் தருணத்தில் கடவுளே பரிவுகூர்ந்து காப்பாற்றினார்.''

"காத்த கடவுளையும் கண்ணிற் காண்கின்றேன்,'' என்று வாசவன் பஞ்சரவல்லியை அணைத்தேகிச் சயனபீடத்தின்மிசை வீற்றிருக்கச்செய்து அவளருகு தரையில் அமர்ந்தான். போரின்கண் அன்று புரிந்த பல செயல்களைப்பற்றிச் சிறிது நேரம்பேசினர். இதனிடையில் வாசவன், "புஜங்கன் இன்று போர்முனை வாராததற்குக் காரணம் அறிகிலேன்,'' என இயம்பி வினவினான்.

"பெண்டிரை ஆடவர் பேதையர் என்பர். பார்க்குங்கால் உங்களுக்கே சிறிதளவு மதிநுட்பம் தாழ்ந்திருக்கின்றது. அரசனையும் தேசத்தையும் ஆசையால் வஞ்சித்த தன் துரோக முகத்தை நேராகக் கண்டுவிட்டால் நம் உத்தம படைஞரெல்லாம் கோபப்பரவசராகி அவனையும் அவன் துணைப் படையையும் துமித்துவிடுவர் என்றுணர்ந்தே என்னருமைத் தந்தையும் பின்னிருந்து பார்த்திருந்தான். இது நீ அன்ப, தெரிந்து கொள்ளாத தென்ன.''

"பிறருளம் உணரு மாற்றல் பெண்ணே, சிறிதளவுளது எனக்குந்தான். இந்தப்படியே நீயும் கருதினையோ அன்றோ என்று சோதிக்கவே வினவினேன்.''

"பிறரது உருவே தெரியாத நினக்கு அவர் உளம் தெரிந்ததோ, காதல? வம்பியம்பினாய் வாசவ, வம்பே இயம்பினாய். என்னொரு சிறுகரவு இதுகாறும் நீ கண்டதில்லையே. இன்றுகூடத் தூக்கத் தளர்ச்சியால் எதிர்மொழி தந்திரேனால் எந்நாளும் இவ்வேடம் வெளிப்பட்டிராது. நின்பாகனெனும் பெருமையால் என்னயல் வந்திலர் அல்லாது நம்படையுடன் போந்த வீரக்காளையர் பலர் பன்முறை என்னை உற்று நோக்குவர். நீதான் இங்கிதனை அங்கதன் என்றே நினைத்திருந்தனை.''

"அற்றன்று பஞ்சரா, கோலத்திற்கு ஒவ்வா நின் குரலைக்கேட்டு ஆதியில் அயிர்த்தேன். நீ பெண்ணோ என்று எண்ணியதும் பஞ்சரவல்லிதான் ஆவாய் என்பதும் தோன்றியது. ஆனால், தேருடன் புறப்பட்டு நீ தலைப்படுமிடத்திலும் வீற்றிருந்ததால் அன்றைக்கே எனக்குற்ற ஐயம்தீர்ந்து நீ பெண்ணல்லள் பாகனே என்று துணிந்தேன். மீண்டு வந்ததும் களைத்து நின்ற குதிரைக்குக் கனைக்கதை சொல்லிமறைத்தாய். ஆயினும் எனதுயிர் தோய்ந்த கரும்பே, அங்கதனுடன் பயிலுந்தோறும், உருவத்தாலும் செய்கையாலும் மொழியினது அழகாலும், வலவனும் நீயே எனும் நிச்சயம் உண்டாயிற்று. 'கண்ணே, ஒளிக்காது உன்னுருவைக் காட்டுவாய்' என்று கேட்கப் பலதரம் நான் வாயெடுத்ததுண்டு.

"எடுத்த வாய்க்கு யார் தளை இட்டது! அடுத்த காதல் உண்மையே ஆயினால், உன் மனம் தாண்டிய மொழியை நீ மறுத்திருக்க மாட்டாய்,'' எனச் சினந்தவள்போல் பஞ்சரவல்லி செப்பினள்.

"மாதருக்கு அறிவு இருக்கலாம், அன்பின் வன்மை குறைவேபோலும். பஞ்சரா இவ்வண்டமும் அணுவும், அண்டத்தின் பிரிவாயும், அணுவின் திரளாயும் தென்படும் இப்பிரபஞ்சமனைத்தும், கருணை கலவாக் கன்னியே, அதனுள் காணலாகும் எப்பொருளும், யாவையும் இக்கண்களுக்கு உன்னொரு உருவேயாய் எங்கெங்கும் தோன்றலால் அங்கதனும் அப்பொருளுள் ஒன்றே என்று நினைத்தே மயங்கினேன், காண்.''

"வலவனை ஒரு வார்த்தை கேட்டிருந்தால் மயக்கம் தீர்ந்திருக்கு மன்றோ.''

"ஆம், எனினும் அஃது உன்னை யான் கேளாவண்ணம் நாணமே மிகுந்து தகைந்தது. உண்மையில் நீ பஞ்சரவல்லி யல்லாவிடின் என் நிலை என்னாம்! மாதர் மையலால் யான், பால்மயங்கிப் பேதுற்றேன் என்று என் பாகன் இளிவர கருவான் என்பதற்கு அஞ்சிய ஐயமீதூரவே இதனைக்கேளாது கழிந்தேன்........இனியாய், இந்நாள் என்றுணை மகிழ்ந்தவர் எவருளர்!''

இவ்வகையில் மேன்மேலும் காதலரிருவரும் வெகு நேரம் உரையாடினர். இடையில் நிகழ்ந்த பற்பல காரியங்களுக்கு இப்பொழுதே வாசவன் பொருளும் புதியதாய் உணர்ந்து உவகை எய்தினான். தனது அற்றம் வெளிப்படாமல் காப்பதற்கு அவள் சூழ்ந்த சிறு கரவுச் செயல்களைச் செப்பினாள். இதைக் கேட்கக் கீழ்வானம் இருள்கலைந்து வெட்கத்தால் வெளுத்தது. பொழுதுணர்ந்த புரவிகளும் படையுள் கனைத்தன. இத்தினத்திலேனும் வெற்றியை முற்றிலும் அடைவதற்கு எந்தமுறை நாடலாமென்று பஞ்சரவல்லி வினவினாள். "போரும் இனி நான் புரிவேன் என எண்ணுதியோ பெண்ணே! அத் தீத் தொழிற்கும் எனக்கும் வெகு தூரம்'' என்று அவள் வியப்புற வாசவன் மறுத்துக் கூறினான்.

"மற்று என் செய்வது?''

"பஞ்சரா, எல்லாப்படியாலும் வெறுப்புறும் இப்போர் விட்டு விலகுவோம். புஜங்கனது பேராசையைக் கெடுக்க இவ்வீரர்தம் இன்னுயிரைப் பலி கொடுக்கும் உரிமை நாம் எங்கிருந்து பெற்றோம்! இவ்வரசைக் கவரவேண்டும் என்று அவன் ஆசையுற்றது தீமையாயின் அதைத்தான் இழந்திடாது வைத்திருக்க வேண்டுமென்று என் தந்தை முயல்வதும் தீதாகாதோ! தனக்கெனக் கவர்வதும் காப்பதும் இரண்டுந் தகவிலாத் தொழிலேயாகும். ஆதலின் இருதிறத்தும் தீயதாம் இச்சமர்தனில் என்மனம் செல்லவில்லை.''

"அன்ப, அமர்கடந்து வெற்றிப் பதாகை நாட்டினாலன்றி நின்விரல் அணிந்த ஏனாதி மோதிரம் மழுங்கி நழுவும். நிருபன்முன் சென்று நீ நிற்க வேண்டாவோ!''

"வையமும் வேண்டா, வேந்தனும் வேண்டா! அயலோர்க்கு அழிவு செய்தே, நமது ஆக்கந்தான் நாடவேண்டிய இவ்வுலகு வேண்டா!''

"எனின், பகைவனுக்குக் கால்பணிந்து, மரவுரியும் மான்தோலும் ஏற்றுத் துறவியேயாக நினைத்தனை போலும்! வாசவ, விவாகமாகுமுன் மனைவாழ்க்கை வெறுத்ததென்னை? என்பால் எப்பிழை கண்டாய், அன்ப!''

"பஞ்சரா, இனியாய், என்னுடனே நீயும் போதுவாய். இப்பொல்லா உலகம் பின்னாகச் சென்று நாம் கானகம் புகுந்து வைகுவோம். நான் நான், எனத் தருக்கித் திரியும் மாக்களில்லாக் காட்டிலே இன்பமும் நாமுமாய்க் கலந்து வாழ்வோம். நால்வகைச் சேனையும் திகிரியும் சிவிகையும் எல்லையில் நாடும் மணிமுடியும் காற்கழலும் பொன்திகழும் ஆதனமும், இவையெல்லாம் பொதியெனச் சுமக்கும் கர்த்தபங்களது முதுகை ஒடிக்கட்டும். இயற்கையின் செல்வத்தை நாம் எய்தி இன்புறத் துய்ப்போம். தெளிபுனலுந் தீங்கனியும் நல்லுணவாய்த் தடந்தூரே மெல்லணையாய்க் களிவண்டும் இசையெடுக்கத் தென்றற்காற்றே கவரிவீசத் தருக்கள் நிழலில், பஞ்சரா...''

"வாசவ, சொப்பனம் தெளிந்ததில்லையோ! விதித்த கருமத்தைக் கைகடக்க விட்டுவிட்டுக் காட்டிலே கவரி தேடினால் உற்றகளை தீருமென்று எண்ணவோ கற்றனை?''

மனத்திற் கினிய காதலியைத் தனதருகு வாய்த்திருக்க இளவாசனது சித்தத்தில் இத்தருணம் விரக்தி எண்ணம் விளைந்ததற்குக் காரணம் ஆராய்தல் சுலபமன்று. பிறர் படும் துன்பத்தைக் கண்டுகண்டு சேகு சேர்ந்திலா இவனது உள்ளம், அக் கடும்போரிலே மாண்டவர்க்குற்ற கஷ்டத்தால் கலங்கி யிருந்தது. வாள் பிளந்தும் வேல்பாய்ந்தும் உயிர் பதைக்க உடல் துடிக்க எழிலுடையோர் பொலிவுடையோர் இளமையின் நலமெலாம் விளங்கிய வாழ்க்கையோர் எண்ணிறந்தோர், தாம் வடித்த இரத்தத்தில் முழுகி மாய்ந்த அக்காட்சி கப்பணம்போல் அவன் மார்பையும் மனத்தையும் குத்தித்தைக்கவே வாட்டமுற்றிருந்தனன். இவ்விளைஞர் மீண்டுவரும் வழிநோக்கிப்

பொழுதுபார்த்துக் காத்திருக்கும் தாயர் தந்தையரும் தனயரும் தாரமும் நைந்துருக அவர்மனையைப் பாழாக்கும் பெரும்பழிக்குத் தானே காரணமாயினன் எனும் துயரம் அவனைப் பிடித்தது. இந்தத் தன்மையில் இருந்த வாசவனுக்குத் தன்காதலியைக் கண்ட இன்பம் வந்து கலந்தபோது சுடுகாட்டில் சுதை புண்பது போலாயிற்று. நற்குண முடையோர்க்கு இனியன வந்து உற்ற காலத்தில் அதற்கு மாறு அயலவர் துன்பமே வந்து அவர்முன் எதிர் நிற்கும். இன்பம் நுகர்ந்தவரே பிறர்படும் துன்பத்தின் கொடுமையை அறிவர். ஆதலால், வாசவனுக்குத் துன்பம் நிலவிய இவ்வுலகம் வெறுக்கலாயதே யன்றித் தனக்குற்ற இன்பத்தைத் தனியாய் அநுபவிக்க இயலவில்லைபோலும்.

# குலசேகரர்.

[414-வது பக்கத் தொடர்ச்சி]

## திருநாளைப் போவார்

இணையில்லா இன்னிசையாழ் கெழுமி இன்பத்
 தும்புருவும் நாரதனும் இறைஞ்சி ஏத்தத்
துணையில்லாத் தொன்மறைநூற் றோத்தி ரத்தால்
 தொன்மலர்க்கண் அயன்வணங்கி ஓவா தேத்த
மணிமாட மாளிகைகள் மல்கு செல்வ
 மதிளரங்கத் தரவணையிற் பள்ளி கொள்ளும்
மணிவண்ணன் அம்மானைக் கண்டு கொண்டென்
 மலர்ச்சென்னி என்றுகொலோ வணங்கு நாளே 5.

[இணை - ஒப்பு; யாழ் - வீணை போன்றதோர் தமிழிசைக் கருவி; இன்பம் - இசை இன்பம்; துணை - ஒப்பு; தொல் - பழைய; மறை - வேதம்; ஓவாது - இடைவிடாது; சென்னி - தலை]

"அரங்கத்தே பயில்வார் அங்கு நான் சென்றக்கால் என் எதிரே தோன்றுவார் அன்றோ? அவர்களையும் காணு திழந்தேனே! பாவின் இன்பத்தை அறிந்தேன் யான். அவ் இன்பத்தை இறைவனிடம் காணக் கணக் காண்பவன் யானொருவனே யல்லன். நாரதனும் தும்புருவும் இசையின்பத்தின் எல்லைகண்டு உணர்ந்தவர்கள். அவர்களும் இசை இன்பத்தினை இறைவனிடம் கண்டனர். அவ்வின்பம்போல ஆண்டவன் அமைந்திருத்தலின் தேனில் மொய்க்கும் தேனீயைப்போல அங்குவந்து சேர்ந்திருப்பர். ஒப்பில்லாத இனிய இசையை எழுப்பும் யாழினைக் கையிலேந்தி இவ்விருவரும் இசை இன்பத்தோடு இறைவன் இன்பத்தை ஒன்றுபடுத்தி ஒன்றாகத் துய்த்து, இசை இன்பத்திலும் இறைவன் அன்பிலும் ஆழ்ந்து தம்மையுமறந்து அவனடியில் வீழ்ந்து பாடிப்போற்றுவர். இவ்விரு அறிஞர்தாமோ அங்குப் போற்றி நிற்பவர்! எம்மலர்க்கும் முன்மலர்ந்த கொப்பூழ்மலரில் குந்தியிருக்கும் மலரவனும் உலகினை எல்லாம் கண்டறிந்துவைத்தும் இவனை யல்லால் வேறொரு பெரியானைக் கண்டறியான். ஆதலின் அவனும் அங்கே போற்றுகின்றான். அவன் போற்றிப் புகழும் பொன்னுரைகள் அப்போதுதான் அவன்பாடிய புத்துரைகள் அல்ல. பழைமைக்கெல்லாம் பழையவனைப் பள்ளிகொண்டவன்பெருமை அப்பெரியானோடு ஒருங்கு தோன்றியதன்றோ? அதுவேபோல அவன்புகழைப்பாடும் பாக்களும் அவன் தோன்றிய நாளிலேயே தோன்றி யிராவோ? ஆதலின் மறையவனும் புத்துரையால் போற்றாது ஒப்பிலாத அறிவுருவாய்ப் பண்டை நாள்தொட்டு வரும் மறைமொழிகளைக் கொண்டே இடைவிடாது போற்றிப் புகழ்ந்து வணங்கிநிற்பான். அவ்வாண்டவன் புகழ் ஓரெல்லைக் கடங்கியிருந்தால் அன்றோ இடைவிட்டுப் போற்ற இடமுண்டு. நான்முகன் தன் வாணாள் எல்லாம் சொல்லிப் பாடினும் முடியாத தொன்மையாம் புகழன்றோ அப்பெரியானது புகழ். இன்னிசைப் புலவரும் காலங்கண்ட பெரியாரும் ஆண்டவனும் ஒருங்கிருந்த இடத்திற் செல்வப்பெருக்கு எத்தகையதாகும். மணிகளாற் சமைத்த மாடமாளிகைகள், வெளியே பேரொளியாகத் தோன்றுவதற்கிணங்க உள்ளேயும் பொங்கி வழியும் செல்வப்பெருக்கொடு பொலிவதனை அவ்வூரில் காணலாம் அன்றோ? அத்தகைய செல்வமுள்ள இடத்தே அதற்குக் காவலாக மதிளும் எழுந்தோங்கி நிற்கும். அத்தகைய இடத்தே அத்தகையாருக்கிடையே கருமணிபோலும் கட்டழகுடைய என்னுடைய அம்மானை அல்லும் பகலும் அறுபது நாழிகையும் என் கண்கொண்டு எந்நாள் கண்டுகொண்டே நிற்பேனோ? எல்லாரும் என்னடியில் வீழ்வது போகச் செருக்கற்ற தூயமனத்தினனுப் அவனுபவினை நோக்கி என்னையும் மறந்து எனது பூச்சூடிய தலையை அவனடியில் தாழ்த்தி வணங்குவதெந்நாளோ? அரசநிலையில் தலையில் பூச்சூடி நிற்பேன்; அரங்கனைத் தொழுநிலையில் அரசநிலையைத்துறந்தே நிற்றல் வேண்டும். எனினும் இறைவனடி மெல்லியனவற்றிலெல்லாம் மெல்லியவாதலின் என் வன்றலைகொண்டு வணங்குதலாகாது. பூச்சூடி மென்மைசெய்து மெல்லடியில் வீழுநாள் எந்நாளோ? அஃதொரு அரசநிலைக் குறிப்பன்றி வேறனைத்தும் புறம்பொழிய நான் தனி நின்று ஆண்டவனை அணுகுநாள் எந்நாளோ?"

அளிமலர்மேல் அயன் அரன்இந் திரனோடு ஏனை
 அமரர்கள்தம் குழுவும்அரம் பையரும் மற்றும்
தெளிமதிசேர் முனிவர்கள்தம் குழுவும் உந்தித்
 திசைதிசையின் மலர்தூவிச் சென்று சேரும்
களிமலர்சேர் பொழிலரங்கத் துஉரகம் ஏறி
 கண்வளரும் கடல்வண்ணர் கமலக் கண்ணும்
ஒளிமதிசேர் திருமுகமும் கண்டு கொண்டு என்
 உள்ளமிக என்றுகொலோ உருகும் நாளே 6.

[அளி - வண்டு; அரன் - அழிக்கும் கடவுள்; அமரர் - தேவர்; குழு - கூட்டம்; அரம்பையர் - தெய்வப்பெண்கள்; தெளிமதி - கலக்கமில்லாத அறிவு; உந்தி - ஒருவரை ஒருவர் நெருக்கித்தள்ளி; களி - தேன் அல்லது மகிழ்ச்சி; பொழில் - சோலை; உரகம் - பாம்பு, அரவணை; கண்வளரும் - தூங்கும்; ஒளிமதிசேர் - ஒளியுடைய திங்களை ஒத்த]

"தொன்மலராய் நின்றும் இறைவன் அருளாலே புதுத்தேன் ததும்புதலால் வண்டுகள் வந்து மொய்க்க அன்றலர்ந்ததுபோல் விளங்கும் பெருமலர்மேல் அமர்ந்த படைப்புக் கடவுளும் அழிப்புக் கடவுளும் வானவர்க்கரசனும் மற்றைய வானவர் கூட்டமும் வானரமங்கையரும் ஐயந்திரிபின்றி உண்மையுணர்ந்த பேரறிவாளரான முனிவர் கூட்டமும் நாற்பாலிருந்தும் புறப்பட்டுக் கண்டகண்ட இடந்தோறும் புறஞ்செலா மனத்தராய் ஆண்டவனை நோக்கியபடியே அழகிய மலர்களைத் தூவிக்கொண்டே வருவாராய் "எப்போதிறைவனைக்காண்போம்" என்ற பேராதரவாலும்கூட்டமிகுதியாலும், ஒருவரைஒருவர் நெருக்கித்தள்ளிக்கொண்டு அரங்கநகர் வந்துசேர்வர். அனைவர்க்கும் ஐயனே அன்றோ ஆண்டவன்! முதற்கடவுளரும் தொழுவர்; முதறிஞரும் தொழுவர்; இன்பமேநாட்டமாம்இமையவரும்தொழுவர்; ஆணும்பெண்ணும் அனைவரும் தொழுவர். பின்தொழாதார் யாரே? இவனன்றோ பெரியான். விருந்துக் கோடுவார்போல விரைந்தோடுவார் நாடுவதும் பெருவிருந்தே யன்றோ! இறைவன் கொலுவீற் றிருப்பதை என் என்பது! அவ்வழகுள்ளவன் அமர்ந்த இடமும் அழகுடையதாக அன்றோ அமையும். கண்டவர்க்குத் தன்னழகால் களிப்பூட்டும் பூக்கள் பூத்துப் பொலியும் பொழில்கள் சூழ்ந்த திருவரங்கமன்றோ அவனூர். அவ்வழகிய இடத்தே அனைத்துலகும் சுற்றிநின்று தொழுதேத்த நடுநிலையாய்ப் பாம்பணையின் மீதேறிப் பள்ளிகொள்வான் எத்துணை அழகாக இருப்பான். அவனது அன்றலர்ந்த அழகிய செந்தாமரை மலர்போன்ற கண்களையும் ஒளிநிறைந்த திங்கள்போன்ற முகத்தினையும் என்றும் கண்டுகொண்டே நின்று என் கல்லானமனமும் நீராய் உருகுவது எந்நாளோ! அவ்வடிவழகனை முழுவதும் கண்டுதெளிவ தெளியோமுக்கு எளிதோ. கண்கண்டார் கண்கண்டாராயும் முகங்கண்டார் முகங்கண்டாராயும் அன்றோ அவன் அழகின் முடிவுகாணாது நிற்பர். கண்ணிற் பொலியும் அருணிலையும்அவனது உள்ளத்தே ஒளியுருவாய் ஒளிரும் அறிவுப்பெருக்கமும், முகத்தே ததும்பிவழியும் அறிவுநிலையும் கண்டால் கன்மனமும் உருகாதோ? அவ்வாறு உருகி நிற்குநாள் அடியேனுக்கு எந்நாள் வருமோ."

மறந்திகழும் மனமொழித்து வஞ்சம் மாற்றி
 வன்புலன்கள் அடக்கிஇடர்ப் பாரத் துன்பம்
துறந்திருமுப் பொழுதேத்தி எல்லை இல்லாத்
 தொல்நெறிக்கண் நிலைநின்ற தொண்ட ரான
அறந்திகழும் மனத்தவர்தம் கதியைப் பொன்னி
 அணியரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்
நிறந்திகழும் மாயோனைக் கண்டுஎன் கண்கள்
 நீர்மல்க என்றுகொலோ நிற்கும் நாளே. 7.

[மறம் - பழிபாவம்; திகழும் - விளங்கும்; வஞ்சம் மாற்றி - வஞ்சனையை நீக்கி; வன்புலன் - தம்வழி வாராத இந்திரியங்கள்; பாரம் - சுமை; இருமுப்பொழுது - இரவு மூன்று யாமமும் காலையும் மாலையுமாகிய ஐந்துபொழுது; இடர் - வருத்தம். இடர்க்கும் துன்பத்திற்கும் வேற்றுமை காட்டுவர்; பின்னரும் துயரத்திற்கும் துன்பத்திற்கும் வேற்றுமைகாட்டுவர். துன்பமோ இன்பமோ ஒருவனுடைய வாழ்நாள்முழுவதையும் உற்றுநோக்கிச் சொல்லவேண்டியது; அது மனநிலையைக் குறிக்கும். இடர் நோய் கவலை முதலிய அவ்வப்போது எழுவனவற்றைக் குறிக்கின்றன. இவ்விடரும்இன்பமாகலாம்; ஒரு கொள்கைக்காக இடருற்றுச் சிறை புகுபவன் வாழ்க்கை இன்பமாகவே அமைகின்றது. பெரியவாச்சான்பிள்ளை, துன்பம் என்பதற்குத் தீவினை எனப்பொருள் கூறுவர்.]

"மன முருகினால் கண்ணின்நின்றும் நீர் பெருகி வழியாதோ? அவனே அறவாழியந்தணன். அவனையடைந்தோரே அறவோர். அவனைக் காண்பதும் அறவழியைக் காண்பதாகும். அவர்கள் அறவோர் ஆகிய போது அவரிடத்தே மறமேது. இனி அவர்களது அற ஒழுக்கம் பொய்யொழுக்கம் அன்று. பிறரும் தாமும் எல்லாமும் இறைவனே என்று உணர்ந்தோர் எவரை ஏய்க்கப் புகுவர். அவர்களைப்பற்றிப் பலபடப் பாரிப்பானேன். அவர்கள் மனமே அறந்திகழும் மனமாகிவிட்டது. அதற்கேற்ப அவர்கள் ஒழுக்கமும் அறவொழுக்கமாகியது. மனதைவென்றபின் ஐம்புலன்களும் அவர்வழி செல்லாது தான்தோன்றிகளாய்க் கண்டகண்ட இடந்தோறும் அலைந்து திரியா அன்றோ? அன்னோர் இடர்ச்சுமையைக் கீழே இறக்கி வைத்தவர் அன்றோ? தீவினை என்பது அவர்களுக்கேது. புது வழியே நடப்பவர் அல்லர்; தொன்றுதொட்டுப் பெரியோர் வாழ்ந்து உண்மை எனக் கைகண்ட நெறியே இவர்களுக்குக் குறுகிய நெறியாகாது எல்லையில்லாத நெறியாயது. அந்நெறியில் இவர்கள் அப்புறமும் இப்புறமும் திரும்பாது நிலைநின்று நேரே செல்பவர்கள். இவர்களது போக்குவீடும் இறைவனேயாகும். அவனிடம் போய்த்தான் இவர்களது நெறி முடிகின்றது. இறைவனையன்றி வேறொன்றையும் காணாத இப்பெரியோர் அவனையே அல்லும்பகலும் புகழ்கின்றனர். அவர்கள் வாய் அவனைப்பாடும்; அவர் செய்த தொழிலும் அறமே; அவர் மனமும் புலனடக்கி மறமொழித்து வஞ்சமாற்றித் துன்பந்துறந்து அறந்திகழும் மனம். இவரினும் தூயோர் யாரே யுளர்! இவர்களே தொண்டர்கள். இறைவன் உள்ளே புகுதலின் மறமெலாம் ஒழிகின்றன. அவனுருவாகிய அறமே திகழ்கின்றது. தம்மை மறந்துநின்ற தகுதியுடையாருக்கு வஞ்சமேது. ஐம்புலன்கள் வேண்டும் கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியும் இன்பமெலாம் இறைவனிடத்துண்மையின் அவை அவனைக்காண அவாவுமேயன்றிப் பிரிது நெறி செல்லா. இன்பமேயாயபோது துன்பமேது? துயர் ஏது? பொன்னியாறு பொன் கொழிக்கும் அழகினையுடைய அரங்கத்தில் அரவணையில் பள்ளிகொள்ளும் ஆண்டவன் அழகால் மிக்கு விளங்குபவன். மருட்கையை விளைக்கும் அவ்வழகினைக் கண்ணாரக்கண்டு இன்பவெள்ளத்தில் அழுந்திக் கண்ணீர் பொழிந்து நிற்குநாள்எந்நாளோ".

(தொடரும்.)



அகத்தியமுனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி:— முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற்குறித்தாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம்பிள்ளை யவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை 1½ அணா.

வி. பி. சார்ஜ் வேறு. கலாநிலயம், வேப்பேரி, சென்னை.

12 C.R.700

# தமிழ்ப் பாடம் 74.

## [நளவெண்பா.]

(409 பக்கத் தொடர்ச்சி)

### கலி நீங்கு காண்டம்.

கலிபுருடன் அகன்றபின் வீமராஜன், நளன் முதலியவர்களுக்கு நல்விருந்து செய்து அமர்ந்திட, அயோத்திமன்னன் நளன்பால் விடைபெற்றுத் தன்னூர்க்கு ஏகுவதும், நளன் தன் மனைவிமக்களோடு மாவிந்தம் நோக்கிப் புறப்படுவதும் இனிவரும் நான்கு செய்யுள்களில் அடங்கிய விஷயமாம்.

வேத நெறிவழுவா வேந்தனையும் பூந்தடங்கட்
கோதையையு மக்களையுங் கொண்டுபோய்த்—தாது
புதையத்தேன் பாய்ந்தொழுகும் பூஞ்சோலை வேலி
விதையக்கோன் செய்தான் விருந்து. 80

பொழிப்புரை:—மகரந்தம் மறைந்து அமிழும்படி தேன் பாய்ந்தொழுகும் பூஞ்சோலைகளையுடைய விதர்ப்பதேசத்தரசனாகிய வீமராஜன், வேதநெறி தவறாத நளவேந்தனையும் அழகிய விசாலமான கண்களையுடைய தமயந்தியையும், அவர் மக்களையும் அழைத்துக் கொண்டுபோய் விருந்து செய்தான்.

உன்னையா னென்று முணரா துரைத்தவெலாம்
பொன்னமரு மார்ப பொறுவென்று—பின்னைத்தன்
மேனீர்மை குன்று வெறுந்தேர் மிசைக்கொண்டான்
மானீ ரயோத்தியர் மன். 81

பொழிப்புரை:—பெருமை பொருந்திய நீர்வளமுடைய அயோத்தி அரசனான இருதுபர்ணன், "திருமகள் தங்கிய மார்புடையவனே, ஒன்றுந் தெரியாமல் நான் உன்னைச் சொன்னவைகளையெல்லாம் பொறுத்தருள்வாய்" என வேண்டிக்கொண்டு பிறகு தன்னுடைய மேல்நீர்மை குன்று வெறும் தேரேறிப் புறப்பட்டான்.

விரிவுரை:—"தன் மேல்நீர்மைகுன்று வெறுந்தேர் மிசைக் கொண்டான்" என்னும் வாக்கியம் பல பொருள்களைத் தந்து நிற்கின்றது. 'குன்று' என்ற சொல் செய்யா என்னும் வாய்பாட்டிலிருப்பதால், அது உடன்பாட்டு வினையெச்சமாக இருக்கலாம், எதிர்மறை வினையெச்சமாக இருக்கலாம், அல்லது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாக இருக்கலாம். ஆதலின், இம்மூன்றினில் அதனை எதுவாகக் கொள்கின்றோமோ அதற்கேற்றபடி பொருள் வேறுபடும்.

எதிர்மறைப் பெயரெச்சமாகிய குன்றாத என்ற சொல், ஈறுகெட்டுக் 'குன்று' என நிற்கின்றதென்று கொள்வோம். ஆயின் அது, தேர் என்னும் பெயர்ச் சொல்லைத் தழுவி முடியும். எனின், இருதுபர்ணன் தன், "மேல்நீர்மை குன்றாத வெறுந் தேர்மீது ஏறினான்," என்று அவ்வாக்கியம் ஆகின்றது மேல்நீர்மையாவது, தேரினது மேல்புறத்தில் செய்திருக்கின்ற அலங்காரத் தன்மை. அது குறையவில்லை. ஆனால் தமயந்தியை உடன் அழைத்துப்போக வந்த தேராதலால் இப்பொழுது அவளில்லாமல் உள்ளே பொலிவின்றி இருதுபர்ணன் கண்ணுக்கு வெறுந் தேராக அது தோன்றுகின்றது. மேல் தோற்றத்திற்குத் தேர் என்னுந் தன்மைக்குரியதா யிருந்தாலும் இருதுபர்ணனது மனநிலையின்படி உட்புறம் வறிதாயிருக்கும் தன் தேரில் அவன் ஏறினான் என்ற பொருளை, (குன்று என்பதை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாய்க் கொண்டால்) பெறுவோம்.

இனி அதனைக் குன்றாமல் என்ற பொருளில் எதிர்மறை வினையெச்சமாக வைத்துப் பார்ப்போம். நீர்மை என்பதற்கு, முறைமை ஒழுங்கு அல்லது ஒப்புரவு என்ற பொருள் உளது. மேல்நீர்மை, என்பது ஆதலால் வெளிக்குக் காட்டும் முறைமை (External-manners) என்ற பொருள்படும். தன் மேல்நீர்மை குன்றாமல் வெறுந்தேர் ஏறினான், என்பதற்குத் 'தமயந்தி வராத வெறுந்தேரில் ஏறவேண்டி யாயிற்றே' என்று மனம் சலித்ததானாலும் வெளிக்குச் செய்ய வேண்டிய முறைப்படி, வந்தனம் செலுத்தல் விடைகொள்ளல் முதலியன ஒன்றுங் குறையாமல் செய்து தேரில் ஏறினான், எனப் பொருள் காணலாம்.

அல்லது, குன்று என்பதைக் 'குன்றி' என்றஉடன்பாட்டுவினையெச்சப் பொருளிற் கொண்டால், 'மேல்' என்பதை உயர்ந்த என்ற பொருளிலும், 'நீர்மை' என்பதைக் குணம் என்ற பொருளிலும் வைத்து, தமயந்தியை இரண்டாம் சுயம்வரத்திற் கொள்ளவிழைந்ததுமல்லாமல், தன்மேல் எறிகின்றமாலை முன் நளன்மேல் விழுந்தது என இடம்பப் பொய்யும் சொல்லியதால் இப்பொழுது தன்னுடைய உயர்ந்த குணம் குறைந்து திரும்பினான், என்று அவ்வாக்கியத்தை அர்த்தம் செய்யலாம். குணந்தான் குறைந்ததென்றால் தேரேனும் நிறம்பியதோ எனின் அதுவும்—வெறும் தேர்.

மேல்நீர்மை, என்பதற்கு, மேலே தோன்றும் தன்மை, அதாவது உடல் என்று பொருள்கண்டு, 'உடல் குன்றித் தேர் ஏறினான்' என்றும் கருதலாம். 'அவமானத்தால் உடல் சிறுத்துப் போயிற்று' என்ற உலகவழக்கும் இருக்கின்றது.

விற்றானை முன்செல்ல வேல்வேந்தர் பின்செல்லப்
பொற்றேர்மேற் றேவியொடும் போயினான்—முற்றும்
றேனீ ரளித்தருகு செந்நெற் கதிர்விளக்கு [பற்
மாநீர் நிடதத்தார் மன். 82

#### பதவுரை.

முற்று - முதிர்ந்த
ஆம்பல் - ஆம்பல் மலர்களினது
தேன் - தேனாகிய
நீர் - நீரை
அளித்து - பாய்ச்சி
அருகு - அருகிலுள்ள
செம்நெல் - செந்நெல்லின்
கதிர் - கதிர்களை
விளக்கும் - விளையச் செய்கின்ற
மா - சிறந்த
நீர் - நீர்வளப்பமுடைய
நிடதத்தார் - நிடததேசத்தவர்க்கு
மன் - அரசனாகிய நளன்,
வில் - வில்லை ஏந்திய



தானை - சைனியங்கள்
முன் - முன்னே
செல்ல - செல்லவும்
வேல் - வேல்களைத்தாங்கிய
வேந்தர் - அரசர்
பின் - பின்னே
செல்ல - வரவும்
பொன் - பொன்னாற்செய்த
தேர்மேல் - தேரின்மேல்
தேவியொடும் - தன்மனைவி தமயந்தியோடு
போயினான் - போனான்.

குறிப்பு: இந்தச் செய்யுளில் வந்துள்ள சில தொடர்களுக்கு இலக்கணம் பார்த்துப் பயிலலாம்.

வில்தானை, வேல் வேந்தர்—இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகள். வில்லைத்தாங்கியதானை, வேலைத் தாங்கிய வேந்தர் என விரியும்.

பொன் தேர்—மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. பொன்னால் செய்த தேர் என விரியும்.

தேவியொடு போயினான்—மூன்றாம் வேற்றுமை தொகா நிலைத்தொடர். ஒடு என்பது உடனிகழ்ச்சிப் பொருளில் வருகின்ற மூன்றாம் வேற்றுமை உருபு. அதுவிரிந்து வந்திருக்கிறது. ஆகையால்,தொகாநிலைத் தொடர்.

முற்று ஆம்பல்—முற்றிய என்றிருக்கவேண்டிய பெயரெச்சம் காலம் காட்டாமல் முற்று என்று நிற்பதால், இத்தொடர் வினைத்தொகை.

ஆம்பல் தேன்—ஆறாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்.

தேன்நீர்—தேன் ஆகிய நீர் எனவிரியு மாதலால், இது பண்புத்தொகை.

நீர் அளித்து—இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். நீரை அளித்து என விரியும்.

செந்நெல் — செம்மை யாகிய நெல் — பண்புத்தொகை. நெற்கதிர்—ஆறாம் வேற்றுமைத் தொகை. கதிர்விளக்கும்—இரண்டாம் வேற்றுமைத் தொகை. நிடதத்தார் மன்—நான்காம் வேற்றுமைத் தொகை. இது நிடதத்தார்க்கு மன், என நான்காம் வேற்றுமை 'கு' விகுதியைபெறும், முறைப்பொருள்.

தானவரை வெல்லத் தரித்தநெடு வைவேலாப்
ஏனைநெறித் தூரமினி யெத்தனையோ—மானேகேள்
இந்த மலைகடந் தேழுமலைக் கப்புறமா
விந்தமெனு நம்பதிதான் மிக்கு. 83

பொழிப்புரை:— "அசுரர்களை வெல்லும்பொருட்டுப் பிடித்திருந்த பெரிய கூர்மை பொருந்திய வேலாயுதத்தைக் கையிற் கொண்டவனே, இன்னும் நாம் கடக்கவேண்டிய வழி எவ்வளவு தூர மிருக்கின்றதோ?" என்று தமயந்தி கேட்க நளன், "மான் போன்றவளே கேள். இந்த மலையைக் கடந்தபின் இருக்கும் ஏழு மலைகளுக்கு அப்புறம் இருப்பது மாவிந்தம் என்னும் நமது சிறந்த நகரந்தான்" என்று பதிலுரைத்தான்.

விரிவுரை:—அசுரரை நளன் வென்றதாகச் சரித்திரம் இல்லை யாதலால் அவனைத் தமயந்தி இவ்வாறு அழைத்ததற்கு அமைதி காணவேண்டும். 'அசுரரைக் கொல்லும்பொருட்டு வேலை ஏந்திய குமரக்கடவுளே' என்று தமயந்தி நளனை அழைத்தாள் என்று சிலர் கொள்ளுவார். முருகனைப்போன்றவனை முருகனே என்று அழைப்பது வழுவன்று. இந்தப்பொருளில், "தானவரை வெல்லத் தரித்த நெடு வேல்" என்ற அடை மொழிகள் முருகக்கடவுள் கையிலிருக்கும் வேலைக் குறிக்குமேயன்றி நளனுடைய வேலாயுதத்தைப் புகழ வந்தவைகளாகா. அல்லது நளன் கையில் இருக்கின்ற வேலாயுதத்தையே அவை குறிப்பதாகவும் கொள்ளலாம். வீரசேன மகாராஜன் மகன் நளன். இந்திரனை வென்று அவன் செல்வத்தை யெல்லாம் கவர்ந்து கொண்ட அசுரர்களோடு அவ்வீரசேன மகாராஜன் ஒரு காலத்தில் சண்டையிட்டுச் செயித்து இந்திரனுக்கு உதவி புரிந்திருக்கின்றானென்பது நைடதத்தில் தெரிகின்றது. அந்த நூலில், நாரதர் சொற்கேட்டுத் தமயந்தியின் சுயம்வரத்திற்கு புறப்பட்ட தேவர்கள் வழியில் நளனை எதிர்ப்பட்டபோது, இந்திரன்,

அரத்தமுண் டொளிரும்வா ளவுணர்ச் செற்றுநந்
திருத்தகு செல்வமுஞ் சிறப்பு நல்கிய
விரைத்துண ரலங்கலான் வீர சேனன்போன்
றிருத்தலா லிவனள னென்ன வேண்டுமால்

|89057.

என்று சொல்கின்றான். 'இரத்தத்தைக் குடித்துப் பிரகாசிக்கின்ற வாள்களையேந்திய அசுரர்களைக்கொன்று, நம்முடைய செல்வத்தையும் சிறப்பையும் நமக்கு மறுபடியும் கொடுத்த, வாசனை பொருந்திய பூங்கொத்துக்கள் கட்டிய மாலையை அணிந்த வீரசேனன் போல் இவன் இருப்பதால், இவனை அவன் மகனாகிய நளன் என்று எண்ணவேண்டும்', என்று இந்திரன் ஊகித்தான் என்பது இச் செய்யுளின் பொருள். ஆதலான் வீரசேனன் கையிருந்த வேல் "தானவரை வெல்லத் தரித்த நெடு வை வேல்." தந்தைக்குப்பின் அவ்வேல் நளனை அடைந்திருப்பது இயற்கை, எனவே இவனைத் தமயந்தி அவ்வாறு அழைத்தாள்.

இனி, முன்னோர் செய்த செயல்களை அவர் மக்கள் செய்தவைகளாகவே பாராட்டி இம்மக்களைப் புகழ்வது கவிகளுக்கு மரபு. இந் நளவெண்பாவிலேயே, சுயம்வரகாண்டத்தின் 126-வது செய்யுளில், 'ஆழி வடிம்பலம்ப நின்றான்' முதலிய குறிப்புக்கள் பாண்டிய வமிச வெவ்வேறு அரசர்களுக்குப் பொருந்தியவைகளா யிருக்க, அவைகளை எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து; அச் சுயம்வரமண்டபத்தின்கண் வந்திருந்த அரசனது செயல்களாகச் சொல்லியதே இந்தக் கவி மரபிற்கு நல்ல உதாரணமாகும்.

இவைகளன்றித் தானவரை என்பதற்கு அசுரரை என்ற பொருள் கொள்ளாமல், தான—வரை, என அதனைப்பிரித்து, மதஜலம் பொழிகின்ற மலைபோன்ற யானை, எனவும்அர்த்தம் கொள்ளலாம். அப்பொழுது அவ்வாக்கியம், "பகைவர்களது மதயானைகளை வெல்லுதற்கு ஏந்திய நீண்ட கூரிய வேலாயுதத்தை உடையவனே," என்ற அர்த்தத்தைத் தரும். தானவரை என ஒரு சொல்லாகக் கொண்டால் அது இரண்டாம் வேற்றுமை விரியாகவும், தான + வரை என இரண்டு சொற்களாகப்பிரித்தால், வரை என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகையாகவும் அமைவதாகும். வரை, என்ற மலையின் பெயர் மலைபோன்ற யானையை உவமையாகு பெயராகிக் குறிக்கலாயிற்று.

## இலக்கணம்

ஒன்றற்கு ஒன்று, செயப்படுபொருள் கருவி பொருட்டு எல்லை கிழமை இடம் என்னும் கருத்துக்களால் சம்பந்தம் ஏற்பட்டிருக்கின்ற தென்பதைக் காட்டுவதற்கு வருகின்ற உருபுகள் வேற்றுமை உருபுகள். அவ்வுருபுகள் மறைந்திருக்க இரண்டு சொற்கள் தொடருமாயின் அத்தொடர் வேற்றுமைத் தொகை.

இரண்டு சொற்களுக்குப் பண்பினால் உண்டாயிருக்கும் சம்பந்தத்தைக்காட்டும் உருபு ஆகிய, என்பது. இதனைப்பண்பு உருபு என்பர். அப்பண்பு உருபு மறைந்திருக்கின்ற தொடர் பண்புத் தொகை.

தாமரை போன்ற கண். கிளிபோல் கூவினன். மதியம் அன்ன முகம். கற்பகம் ஒப்பக் கொடுத்தான். என்ற வாக்கியங்களைக் கவனித்தால், தாமரைக்கும் கண்ணிற்கும், ஒன்றற்கு ஒன்று உவமையாய் இருப்பதால் சம்பந்தம் ஏற்படுகின்றதென்பது எளிதில் தெரியவரும். அப்படியே, கிளிக்கும் கூவுதற்கும் இருக்கின்ற சம்பந்தம் உவமையாலேயே ஏற்படுகின்றது. மற்ற உதாரணங்களிலும் அவ்வுவமைச் சம்பந்தத்தைக் காணலாம். இப்படி இருசொற்கொள் உவமையால் சம்பந்தப்படுகின்றன என்பதைக் காட்டுவன, போன்ற போல அன்ன ஒப்ப, முதலிய சொற்களாம். இவைகளை உவம உருபு என்பர். உவம உருபு மறைந்திருக்க இரண்டு சொற்கள் உவமைப்பொருளில் சம்பந்தப்பட்டு நடக்குமாயின் அத்தொடரை உவமத்தொகை என்பர்.

தாமரைக்கண் கிளி கூவினன். மதிமுகம். கற்பகக் கொடை, என்பன போன்றவை உவமத்தொகைக்கு உதாரணங்கள். பவள வாய், பிறைநுதல், துடியிடை, மலரடி போன்றவைகளும் உவமத்தொகைகளே.

இனி, உம்மைத் தொகையின் தன்மையைக் காண்போம்.

இரவு பகல் நானுன்னை மறப்பதில்லை—வீரர் கத்தி கேடகம் தாங்கி வந்தனர்—தாய்தந்தையரை வணங்கினன்—இரண்டேகால் வீசை நெய் வாங்கினன்—தயாதனுக்கு இராம லக்ஷ்மண பரத சத்ருக்கனர் பிறந்தனர்.

இவ்வுதாரணங்களைச் சற்றுக் கவனித்துப்பாருங்கள். இரவுபகல், என்பது இரவும் பகலும் என்று விரியும். அப்படியே, கத்தியும் கேடகமும், எனவும், தாயும் தந்தையும் என்றும், இரண்டும் காலும் என்றும், இராமனும், லக்ஷ்மணனும், பரதனும் சத்ருக்கனனும் என்றும் விரிந்து, ஒன்றோடு ஒன்று சேர்த்துக் கணக்கு எண்ணவேண்டிய பொருளில் அவை தொடர்வது தெரியவரும். இப்படி எண்ணுவதற்கு உதவியாக வருவது உம் என்னும் இடைச் சொல்லை, எண்ணும்மை என்பர். அவ்வெண்ணும்மை மறைந்து நிற்கச் சொற்கள் தொடருமாயின் அத்தொகை உம்மைத் தொகை.

## மாறன் பாப் பாவினம்.

[ 409 பக்கத் தொடர்ச்சி ]

### கோச்சக வொருபோது

*தரவு.*

கற்பனைமேற் கொண்டொழுகுங்
கடைப்பிடியார் வயிற்றிருநாண்
பொற்புறமாற் றவிற்பொறித்த
பொருவருசெவ் வணிநோக்கித்
தற்பொதிவாட் டுறந்தகெழு
தகைத்தாய புனலூர
னிற்புகலால் வெஞ்சினநஞ்
செனக்கூர்த்த மருணோக்க
முற்பலதெள் ளமிர்துயிர்த்தற்
றெளிகிளர்சீர் பயின்றவே

*தனிச்சொல்.*

அஃதன்றால்

*சுரிதகம்.*

அனகனிங் கெமையாண் டருண்மகிழ் மாறன்
புனல்வறங் கூராப் பொருனையுட் புத்தேட்
டினகரோ தயத்திற் செவ்விபெற் றலர்ந்த
தண்மலர் மரைபுரை தகைத்தா
மொண்ணுத லரிவை யொளிர்திரு முகமே.

இது, தன் றளைத்தாய்த் தரவு தனிச்சொற் சுரிதகம், என்னு மூன்றுறுப்பால் வந்தது. இதனை யாப்பருங்கலக் காரிகையார் தரவுகொச்சகக் கலிப்பா வென்பர். இதனது வேறுபாடுங்காண்க. இது, பகுதி—பரத்தையிற் பிரிதல். துறை—முகமலர்ச்சி கூறல். அலங்காரம்—அற்புதவுவமை (அற்புத - உவமவுருபு) —— 8.

### தரவிணை கோச்சகக் கலிப்பா.

*தரவு.*

இமிழ்திரையாழ் கலியமுவத்
திரும்புனன்மீ மிசைபொடிக்குங்
குமிழ்புரைபுன் விலைப்புலவுக்
குரம்பையின்வீ வினையோர்துங்
கடிகைதாங் கழிதொறாஉங்
கழிபெருங்கா மருசெவ்வி
பொடிகையா யுயங்கினமூப்
புடனுறநூன் முகத்துணர்ந்து
மமிழ்தினும்வான் சுவைபயப்ப
வருண்மாறன் மயர்வறக்கூர்
தமிழ்மறையின் றுறைமூழ்கித்
தத்துவந்தான் றலைப்பெற்றே
யொருதலைபற் றுனக்கிகல்செய்
குனருணர்வி னிலைநீத்த
பொருள்வேட்ட கெழுதகைமைப்
புரவலநின் போக்குறீஇ
மருள்வேட்டா மறத்தியான்
வடிப்பன்பற் பலவமம்

*தரவு.*

தாளாண்மை யகத்துறீஇத்
தகவிலர்க்குந் தக்கார்க்கும்
வேளாண்மை செயத்துறப்பின்
வெள்வளைதா மிறைதுறப்பத்



தொய்யினு னணைமென்றோட்
டுணைதுறப்பப் புதுமதிபோன்
மையில்வாண் முகமாழ்கி
மணிமாமை யதுதுறப்பக்
கறைகெழுவே லெனமிளிர்ந்து
கள்ளுயிர்க்குங் கழுநீரி
னுறைமலிகோ யுழந்திருகண்
ணுருங்குதுயில் வினைதுறப்ப
நன்னுதலார்க் கணியாய
நலம்புரிநா ணுளந்துறப்ப
வின்னுயிர்தன் னிலைதுறக்கு
மிவைமன்ற வின்னுங்கேள்.

*தனிச்சொல்.*

அஃதன்றால்

*சுரிதகம்.*

புகழும் வாய்மையும் பொச்சாப் பின்மையு
நிகழுந் தோற்றமு நின்னிலை துறப்பக்
கற்கடங் கடந்து சேரற்
குற்றதொன் றுளதுறு வனவுலப் பிலவே.

இது, தன்றளைத்தாகித் தரவிரட்டித்துத் தரவு தனிச்சொற் சுரிதகம் என்னு மூன்றுறுப்பால் வந்தது இதனை யாப்பருங்கலக் காரிகையார் தரவிணைக் கொச்சகக் கலிப்பா வென்பர். இதனது வேறுபாடுங் காண்க இது, பகுதி - பொருள்வயிற் பிரிதல். துறை - செலவழுங்குவித்தல். அலங்காரம்—இதனுள், பலவயினுவமை வந்தாயினு முன்னவிலக்கினுள் தலைமைவிலக்கு. 9

### எண்ணிடையிட்டுச் சின்னங்குன்றிய கோச்சக வொருபோகு.

*தரவு.*

தாதவிர் தண்டுழாய்த் தளையவிழ் வகுளமதாய்
மேதகு புயநான்கும் விழுமியதோ ரிரண்டாகி
மாதவனென் றருமறையும் வாழ்த்துந் திருநாமம்
பூதலத்தோர் மாறனெனப் புகழ்க்குருகூ ரமர்ந்து
[ளாய்.

*(இது நான்கடித் தரவு.)*

*தாழிசை.*

ஈசனென்று நீயென்று மெண்ணுதற்கோர் பாவினையா
னீசனிறை யொன்றமில னென்றென்று நீநிகழ்த்து
மோசமதிங் கென்னென் றறியேன் மொழிந்தருளே 1

மத்துறுவெண் ணெய்க்காக மாதவநீ கட்டுண்ட
தெத்திறமென் றுறுதிங்க ளெம்பிரான் சோகமுறு
மத்திறமு மேதென் றறியே னருளுதியே 2

தன்னைத்தான் பாடியவன் சடகோப னாகியநீ
யென்னைப்பாடென்னைப்பாடென் றிறைவர்நிற்பவவன்
பின்னைத்தா னீயிருந்து பாடியதென் பேசுகவே. 3

*(இவை மூன்று மூன்றடித் தாழிசை.)*

*தனிச்சொல்.*

அஃதான்று

*சுரிதகம்.*

நற்றாய் முலைப்பா னயவா விரதங்
கற்று யதனாற் கடவுளன் றமிரென
நின்னிலை நினைவற் றெமக்கா
லுன்னிலை நீயே யுணர்வது கடனே.

இது, நான்கடி நேரிசை யாசிரியச் சுரிதகம். இது. நான் குறப்பாய்வந்ததாயினும், தேவபாணியாய் வருதலின் முதனிலை யொத்தாழிசை யாகாது; "ஏனையொன்றே, தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே" என்பதனாற் றேவர்ப்பராயிற்றேனும், எண்ணிடையிட்டுச் சின்னங் குன்றலின் வண்ணகமு மாகாது. ஆதலானிது, எண்ணிடை யிட்டுச் சின்னங்குன்றிய கொச்சக வொருபோகாயிற்று. "சீர்வகைக் கலிக்கு, விராயதனையும் ஒருஉநிலை யின்றே" என்பதனாற் சீர்விரவப் பெற்றும், "கலித்தளை யடிவயி னேரீற் றியற்சீர் நிலைக்குரித் தன்றே" என்பதனாற் சீர்வகைக் கலியடியாதலின், வாழ்த்துமென்னு நேரீற் றியற்சீர் வந்தது. இது, திணை—பாடாண். துறை—கடவுள் வாழ்த்து. அலங்காரம்—சந்தயத்துள், சுத்தசந்தயம். நிச்சய கெற்பமெனினுமாம். "ஆறறியந்தண" ரென்னுங் கலியுமிது. (10)

### கோச்சக வொருபோகு.

அரவணைமேற் றிரைத்திருப்பாற்
கடற்குடபா லறிதுயில்கூர்
பரனிலவுந் திருவுந்திப்
பனிமலர்ப்பொற் பொகுட்டுயிர்த்த
வலகிலவாம் பகிரண்ட
மவையனைத்து மகத்தடக்கி
யிலகுமொரு தனிப்பெரும்பா
ழினையுமகத் தடக்கியவாம்
விரசையெனுந் திருநதிக்கப்
புறத்தாய விழுமியவென்
றுரைபரசும் பரந்தாமத்
துடனுறைவோ ரிருந்தெய்துஞ்
சுகமிவணின் றனைமென்றோட்
டுயின்முகத்தெய் தினனுக
வகனமர்ந்து மையிற்றொடர்ந்த
வமைதியவா யுயிரெனலாந்
தொடர்புடைய தமர்பிரியத்
தொழிலியற்றி யதுவென்றோ
மடலவிழ்வண் பொழிற்சிறையு
மறைதெருளா வகையமைத்துந்
திருவுருவம் பருவநலன்
சிறந்தகுல னொடுமொன்றென்
னொருதலையா கவுமமைத்த
தொருங்கிவையென் றனைநெஞ்சான்
முயற்சியதொன் றிலனுகு
முறைமையிற்கந் திருவமண
மியற்றியதா யியற்றமிழ்தேர்
மகிழ்மாற னெழில்வரையிம்
மடவா லினமகிழ்ந் தளித்த
கடவுளை நினைதொறுங்
களிக்குமென் மனன்றனே.

இஃதடக்கிய லின்றித் தன்றளைத்தாய்ப் பதினறடித் தா யடிமிமிர்த்தீற்றயலு மீறு முச்சீரு நாற்சீரு மாகி யாசிரியத்தளையாலும் வெண்டளையாலும் வந் தடக்கியலின்றி, யடி மிமிர்ந்தொழுகிய கொச்சக வொருபோகு.

இங்ஙனங் கலியடியாய்க் கூறுக்கா னேரிசை யாசிரியத்தோ டிதனிடை வேற்றுமையின்று மெனவுணர்க. "எழு சீரிறுதி" "கலியே" வெண்பாவியலினு முடியும். "அகன் ஞாலம்" என்னு நெய்தற்கலியு மிது. அடக்கியலின்றி அடிமிமிர்ந் தொழுகிய கொச்சக வொருபோகின் பகுதியாய்த் தனிசசொல்லு மடக்கியலுமின்றிச் சுரிதகமற்று வந்தது. "ஒரு சிறு பான்மையத னுயர்பே." என்பதனானு முணர்க. இக்கருத்தா ரிதனை வெண்கலி யென்ப. வெண் கலியாமாறு முன்னர்க் காட்டுதும்; அன்றியும், "அரிதாய வறனெய்தி" யென்னுங் கலிப்பாவினு ளீற்றயலடி, "பல் வியும் பாங்கொத் திசைத்தன" வென, முச்சீரான் வந்தது. "மணிநிற மலர்ப்பொய்கை" யென்னு மருதக்கலியுள் "இல்லிநெழீஇ யாழ்தழீஇக் கல்லாவாய்ப் பாணன் புகு

தராக்கால்'' என, வெண்பாவியலானும் பண்புற வந்தவாறு காண்க. இனி, ''யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடைய'' தென்பது, யாப்பின் வேறுபடுவனவும், பொருளின் வேறுபடுமனவு மென விரண்டாம்; அவற்றுள், யாப்பின் வேறுபடுதலாவது, மேற்சொல்லியவாறு மினிவருகின்றவாறு மின்றி,யாப்பிலக்கணத்தின்வேறுபடுதலுங் கலியுளொத்தாழிசைக்கேற்பட்ட கடவுள் வாழ்த்துப் பொருண்மையின்றிக் காமப்பொருளாக வரினுமெனக் கொள்க. எனவே, வண்ணக வொத்தாழிசைக் குறுப்பாகியவற்றுளொன்று மிரண்டுங் குறைந்து வருவன கொச்சக வொருபோகெனப் பெயர்பெறுமெனக் கொள்க. இவ்வாறு வருங் கொச்சகங்களை யொரு வரையறைப்படுத்து நான்கு பாவினு மினஞ்சேர்த்துப் பண்ணிற்குத் திறம் போலத் தாழிசை, துறை, விருத்தமெனப் பன்னிருபகுதியாகக் கூறுவர்; அவற்றுள், வெண்பாவிற்கு மாசிரியத்திற்கு மின முன்னர்க் கூறினும். ஒழிந்த விக்கலி முதலிய பாவிரண்டிற்கு மினம் பின்னர்க் காட்டுதும். இது, பகுதி—இயற்கை. துறை—தெய்வத்தை மகிழ்தல். 11

### எண்ணிடையிட்டுச் சின்னங்குன்றிய வொருபோகு

(ஒருசாரார், சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா என்பர்.)

தரவு.

புத்தேளிர் நிரப்பிகப்பான்
பொருதிரைப்பாற் கடல்கடைந்து
மெய்த்தேவர் பெருமானும்
வேங்கடத்தெங் கண்ணபிரான்
புரந்தருணன் மருந்திறுத்த
புலந்துவரத் துநந்திழைத்த
வரந்தருபெண் ணமிர்தாமிம்
மடவாண்மென் றோடுறந்தே
யில்லறத்தின் றொடர்புடையோர்க்
கின்பமுமா துலர்க்கருத்து
நல்லறத்தின் றொடர்ப்பாடு
நனிதருஞ்செம் பொருளென்றே

ஆய்ந்ததனால்

ஒருதலைபெற் றனளுகி
யுருப்பவிர்வெங் கடத்திடைபோய்
வருபொழுதிற் பெருவறங்கூர்
மணிநாவின் மம்மர்நோ
யருண்மடந்தை யிலவிதழ்த்தெள்
ளமிர்தருந்தத் துறந்தனவே.

அஃதான்று

வேணுதிவன் பாற்கடத்தா
ரிடைவேனில் வெயிற்குமையாள்
கோணுதற்கட் டழற்குளித்த
மதனெனமெய் கூர்ந்தநோய்
பானலங்கட் கிளிமொழிமெய்ப்
பரிசத்தாற் றறந்தனவே

அஃதான்று

உருவிலா வுருவிற்று
முருளிலா மசரதத்தைப்
பருகுவான் புனலெனச்செல்
பாலைச்சார்ந் துளங்கொதிநோய்
திருமகளோ டுறுமின்பத்
திரையாடத் துறந்தனவே.

அஃதான்று

வரையிரு மருங்கினு மரீஇய வெவ்விடம்
புரைசுரத் தாரதர் புக்குயிர்க் குறுநோ
யம்மென் சாய லணிமயில் பைம்பூட்
கொம்மை வெம்முலைக் குன்றிடை முயங்கலி
னனவு கனவா நயந்துழி
கிணைகலர் நீளிடை நீத்தனவே.

இது, தரவு, தாழிசை, தனிச்சொற், சுரிதகமென்னும் நான்குறுப்பினோடுந் தாழிசைதோறுந் தனிச்சொற்பெற்று, நேரிசையொத்தாழிசையிற் சிறிதுயாப் பின் வேறுபடுதலால், ஒரு சாராசிரியர் சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா வென்ப. இதுவும், எண்ணிடையிட்டுச் சின்னங்குன்றிய கொச்சகவொருபோகு. இது, பகுதி - பொருள்வயிற் பிரிதல். துறை - உண்மகிழ்ந்துரைத்தல். 12

### பஃறாழிசைக் கோச்சகக் கலிப்பா.

தரவு.

மாதர்வாண் முகத்திருமர்
மதிப்பிளவொத் திமிழிசைய
வோதைநீர்ப் படுவிடந்துற்
றுறவிடையார்க் கிடரிழைத்த
மேதையா னிடந்தழீஇ
மேம்படுவிற் றுணைசெகுத்த
திலகவா னுதற்செவ்வாய்த்
திருமகள்கா முறும்பெருமா
னலகிலாக் குணங்களினுழ்ந்
தருமறைவண் டமிழ்கூர்ந்த
தெண்டிரைத்தண் டுறைப்பொருனைத்
திருநாடன் றிமிரவரி
வண்டிரைக்கு மகிழ்மாலை
மணிமார்பன் றடரிவாய்.

ஈரடித் தாழிசை.

குறுந்துணைபற் பணியுமிழந்த
குருமணிகள் ளிருடீஇ
யுறுப்பகல்போன் றழலினுமா
ணொளிவிடுநீ ணிலையவால்.
புறக்காழ்வன் புணையுகுத்த
புதுமணிமா தவன்புகழ்போ
னிறக்கூர்வெண் மதியினுநீ
டிருடேத்து நிலையவால்.
கொண்டலினுங் கிடியெனவே
கோதையிற்பே துறக்குளிறுந்
தொண்டகத்தி னொலியடங்காத்
துயரியற்று நிலையவால்.
ஆளியெனப் பொறிவரிய
வடிபுலியிற் றெறுந்திறங்கூர்
ஞாளியின்வாய்க் குரைப்புயிர்க்கு
நடுக்குதவு நிலையவால்.
நற்றுயர் முகத்துபைய
நமன்பொருவு முருவிற்றாய்
வெற்றுலத் தினுங்கொடிய
விழிதுஞ்சா நிலையவால்.
ஊர்துஞ்சா துஞ்சினுமோ
வொருசிறைவாழ்ந் திருந்தவய
லார்துஞ்சார் நீளிடைவாழ்
பவர்துஞ்சி யெவன்மன்னோ

இவையாறு மீரடித் தாழிசை.

தனிச்சொல்

எனவாங்கு

சுரிதகம்

கங்கு லின்னணங் கழியா நின்றது
திங்களுஞ் சுடரனிச் சேணுற லுளதா
லின்னுயிர்க் கேள்வரெய் தாரென்
பொன்னிறப் பைம்பூட் புணர்முலைக் குவட்டே.

இது, ஏழடித் தரவு மீரடித் தாழிசையானுந் தனிச்சொல்லு நேரிசை யாசிரியத்தா லிற்ற சுரிதகமும் பெற்று ஒத்தாழிசையிற் சிறிது வேறுபட்ட விதனையு மவ்வாசிரியர் பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா வென்ப. இவற்றது பேதங்களுங் கண்டுகொள்க. பகுதி— இரவுக்குறி, துறை-காப்புச் சிறைமிக்க கையறுகிளவி. அலங்காரம்— ஒத்து வென்றதென்னும் வாய்பாட்டா லொரு தொடர்பினுள் வந்த வுவமை. 13



# கம்ப ராமாயணம்

## பாலகாண்டம்

## 13. எழுச்சிப் படலம்.

[ 417 பக்கத் தொடர்ச்சி ]

### அமைச்சர் வேண்டா வரசியன் மாட்சி

பெருமகன்றன் திருமண வோலையொடு ஜனகன் விடுப்பக் ''கடுகிய தூதருங் காலிற் காலிற் சென்று இடிகுரல் முரசதிர் அயோத்தியை எய்தி''த் தயரதன்பால், ''அரச, நின்புதல்வர் போயபின் நிகழ்ந்ததை யிதுவென நெடிதுகூறினர்.'' இரண்டுகால்கள் கொண்டுள இவ்வோரடி, பொருள்வழி நடந்ததோவென ஐயுறுத்துந் தன்மைத்து. முதற்பார்வைக்குத் தோன்றும்வண்ணம் அத்தூதர் காற்றினுங்கடுகித் தம்கால்களைகொடு இடையுள நெடுவழி கடந்தனரென்பது உண்மையாயின், விதேகவேந்தன் தன் தூதர்க்குச் சிவிகை யிரதம் பரி கரி எனும் ஊர்தியொன்று மளிக்காமல் துரத்தியவொரு உலோபஞ் செய்ததேனெனத் தெரிந்ததில்லை. வடமொழி நூலின்கண் இத்தூதர் குதிரையிற் சென்றுளர். இரண்டு 'கால்களில்' ஒன்று காற்றைக் குறிப்பதால் மற்றது நடைக்குரிய உறுப்பே யாதல்வேண்டுமென வுன்னும் நம்மனோர் மனத்துடன் அசதியாடுகின்றனர்போலு மிக் கம்பர். விரைவுபற்றி யடுக்கிவந்த அவ்விரு கால்களும் காற்றையே தம் பொருளாகக் கொண்டவைகளாகலாம். மற்று, உருளைக்கொரு பெயராய 'கால்' என்னுஞ்சொல் சினையாகுபெயராய்த் தேரினைக் குறித்து நிற்கின்றதெனினும் அமையும். ''காலிற் காலில் சென்று'' என்றொரு பாடபேதம் இருக்குமாயின், காலில்லாக் காற்றினும் விரைந்து சென்றனர் அத்தூதர், எனப் பொருள்கொள்ள இயலும். வாயுவேகமாய் இவர் கால்களாலேயே இத்தூரம் ஓடி வழிகடந் திருப்ப ரெனின், இரைத்திரைத்துத் தயரதன்முன் நெடிதுயிர்க்கும் நிலையன்றி நெடிதுரைக்கும் வலிமை வாய்த்திரார். ஆதலின், ஜனகவேந்தன் தன் தூதர்க்கு ஊர்தியொன் றளித்தற்கிசைந்த உரையலால் இவ்வடிக்கு வேறு இயைத லரிது.

நெடிதுகூறிய தூதர் முடங்கலைநீட்ட வாங்கியோர் புலமகன் அதனை ஓதுதலும் தயரதன் வயிரத்தோள்கள் மலையென வீங்கின. மூன்றுநாட்களுக்குமுன் அங்கவர் செவியை எற்றிமுழங்கிய அப்பேரொலியின் உறுபொருளை யின்றுணர்ந்தனனாகிப் பொருமி விம்மினன். தூதர்கள் நல்லணியும் பொற்றாசும் நல்கப்பெற்றனர். சக்கிரவர்த்தியும்,

வானவன் குலத்தெமர் வரத்தி னல்வரும்
வேனில்வே ளிருந்தவம் மிதிலை நோக்கிநம்
சேனையு மரசருஞ் செல்க முந்தென
ஆனைமே லணிமுரா சறைகென் றேவினன்.

[சூரியனது குலத்தில் உதித்த என் முன்னோர்பெற்றவரத்தினுல் வந்து பிறந்த மன்மதனனைய என்மகன் இராமன் இப்பொழுது தங்கியிருக்கும் மிதிலையைநோக்கி எம்பரிவாரங்களும் மற்றுள அரசரும் முன்னர்ச் செல்லக்கடவர், என ஆனைமேல் அழகிய முரசையேற்றி அறையும்படி கட்டளையிட்டான்]

தனது அருமகன் திருமணவிழாவிற் கேக விழைந்த உள்ளத்தனாய்த் தயரதன் எழுந்தவிது செயற்கரிய தொன் றன்றெனினும், இது செய்த முறையினால் அலகிலா அரசின்மாட்சி அவன்பால் அமைந்துள்ள பெருமையை உணர்தற்கு வான்மீகமுனிவரின் உதவி வேண்டும். அவ்வுதவிகொண்டு ஆராயுங்காலையில், தூதர் உரைத்ததற்கும் தயரதன் அணிமுரா சறைகவென் றுஏவியதற்கும் இடையே கம்பர் நூலில் காணாதவொரு சிறுசெய்தி வான்மீகத்தில் நிகழ்ந்திருக்கக் காணலாகின்றது. வடமொழி முதனூலில், ''தூதர் சொல்லியதைக் கேட்ட தயரதன் பரம சந்தோஷமடைந்து, வசிஷ்டர் வாமதேவர் முதலிய ரிஷிகளையும் எல்லாமந்திரிகளையும் பார்த்து, ''நமது செல்வக் குமாரன், விச்வாமித்திர முனியால் பாதுகாக்கப்பட்டுத் தனது இளையவனுடன் இப்பொழுது மிதிலையிலிருக்கின்றான். ஜனகரும்அவன் பலபராக்கிரமத்தைக் கண்ணாரக் கண்டு, தமது வாக்குதத்தத்தை முடித்து வைப்பதற்காக அவனுக்குச் சீதையைக் கல்யாணம் பண்ணிக்கொடுக்க நிச்சயித்திருக்கிறார். இது உங்களுக்கெல்லாம் சம்மதமாக இருந்தால் காலதாமதமின்றிச் சீக்கிரம் புறப்பட்டு நாம் அவருடைய நகரத்துக்குப் போவோம், என்றான்.'' அமைச்சர் முதலாயினோர் ஒவ்வக்கண்டு அவன் வெகு சந்தோஷமடைந்தனன். இன்னவாறு அங்குத் தயரதன் தன்னொரு மாமகன் மன்றலைக்குறித் தமைச்சரோடு ஆய்ந்ததுமன்றி அவர் தம் அனுமதியும் பெற்றது அரசின் முறைக்கு இயன்றதேயாம் என்பதற் கையமில்லை. எனினும், கம்பர்பால் தன்பெருமையின் பொதுவறவுயர்ந்த தன்மையைக் கற்றுள மன்னன் இங்கு அயர்ந்தேனும் அமைச்சர்தம் மந்திரமும் அநுமதியும் நாடியிருப்பானாயின் ஆசிரியர்ப் பிழைத்த பிழைசில செய்தவனாவனென் றெண்ண இடமுளது. அரண் படை அமைச்சராதிய அங்கங்கள் அரசருள் ஏறென இயங்குதற் கின்றியமையாதன வாகலாம். மக்களுள் தெய்வமென வுயர்வோர்க்கு அவை வேண்டா. கம்பரது கருத்துப்படி தயரதன் மறமன்னன் ஆகாது அறவேந்தனாய் அமைகின்ற பரிசுதனை அரசியற்படலத்திலும் கையடைப்படலத்திலும் வேறுசில விடங்களிலும் கண்டுளோம். தன்னுடைய தூய்மையால் தளராத நிலையுடையோற்கு அயலுதவி வேண்டுமெனும் நினைவுந் தோன்றிடாது. அரணும் படையும் அமைச்சரும் இலாதானலன் தயரதன். இஞ்சியுங் கிடங்கும் சூழ்வரு நகரினன்; கயரத துரகமாக் கடல்கொள் காவலன்; அறுபதினாயிரரெனும் அளவிலாற்றல் அமைச்சரை யுடையவன். எனினும் இவையெலாம் அவனுக்கு அணியென அமைந்தனவேயன்றி அவைகளால் தனக்கோர் உதவி உறுதற்கிவன் உன்னினனல்லன். தன்னுடைய ஆற்றலும் சூழ்ச்சியும் ஆதாரமாய் ஊதியங்கருதி உலகாளவேண்டுவோர்க்கு அரணின்வலியும் படையின் திரளும் ஒற்றர்உரையும் அமைச்சர்முகமும் நோக்குதல் வேண்டும். இனியதுபோலு மிவ்வரசை யெண்ணுது தனியரசாட்சியில் தாழு முள்ளத்தனாய இவ்வுத்தமனே,'தனுவன்றித் துணையில்லான் தருமத்தின் கவசத்தான்' ஆயினன். ஒற்றர் இவன் பெற்றிருந்தா

னென்றுகூடக் கம்பராமாயணத்தில் ஒருவார்த்தை இல்லை. அரண்வலியெல்லாம் அணிநிலை யாயிற்று. தன்படைக் கடல்பற்றித் தயரதன் எங்கும் பேசக் கேட்டிலம். அநிகத்தொடு அமைச்சரையுங் கூறுது கம்பர் அரசியற்படலத்தில் விட்டுவிட்டார். அமைச்சரை அழைத்திவன் மந்திரஞ் சூழ்ந்ததும் ஓரோநாள். அந்நாளும் அவனுக்கு இறுதிநாளாயிற்று. மூப்பினால் நைந்து தன்னிலை தளர்ந்த தயரதன் மனத்தன்மையைக் காட்டும் மந்திரப்படலம். இராமனுக்கு மகுடஞ்சூட்ட நினைத்த இவ்வேந்தன் அமைச்சரோடு உசாவி அவர்தம் அநுமதிகேட்ட இதனை, அக்காலத்தில் 'நந்தம் நாட்டில்' ஏதேச்சாதிகாரம் இருந்ததில்லையென்றும், மந்திரச்சபைக் கடங்கியே மன்னவர் நடந்தனர் என்றும், குடிகளின் கருத்தறியாது கோவேந்தர் ஒன்றுஞ்செய்யத் துணிந்திலர் என்றும், இன்னவன்ன சிறுமைகளைப் பெருமைக்கு அடையாளமாய்க் காட்டிப் பாராட்டக் கேட்டிருப்பவர், அயோத்தியாகாண்டத்தின் முதற்படலத்தை ஒரு முறைக்குப் பன்முறை ஆழ்ந்துபடித் தாய்வது நலமாம். அறுபதினாயிரம் ஆண்டுகள் வையத்தைக் காத்திருக்க, அத்தூய்மையை மறந்து தான் 'ஆண்டான்' எனத் தாழ்த்திக்கொண்டதும், 'இறந்திலன் செருக்களத்து இராமன் தாதைதான்' என உலகின் வாய்கொண்டு தன்னைச் சிறிதுமாதாரமின்றிப் பழித்துக்கொண்டதும் வயோதிகத்தால் விளைந்த வார்த்தைகளாவது ஐயமின்றிப் புலப்படும். பின் இம்மன்னர்பிரான் கேகயன் மகள்முன் கையற்றநிலையனாய் மாய்கின்ற நொய்மையை இயற்கையாக்குதற்கே இங்கு மந்திரஞ் சூழ்ந்ததை முன்குறியாய்க் கம்பர் காட்டினார்.

அன்னதோர் தளர்நிலை இன்னும் எய்திடாது, தன்னிலே, தன்தூய்மையிலே, அத்தூய்மையால் வருங் காப்பிலே, ஓர் அசைவிலா நம்பிக்கை யுடையனாய்த் தயரதன், மிதிலையின் மங்கலதூதுவர் வந்துள இந்நாள் நிற்கின்றானாதலால் அவருரை கேட்டவுடன் அமைச்சரை அழைத்திடாது ஆனைமேல் நேரே அணிமுரசு ஏற்ற ஏவினான்.

இராமனுக்குத் திருமணமென்ற செய்தியாலேமுற நிமிர்ந்த வேந்தனைக் காட்டிய கம்பர், அந்நகர் வள்ளுவன் உற்றதோர் ஊக்கமும் மகிழ்வும் எத்துணைத் தென்பதையும் இனி இனிது காட்டுகின்றார்.

வாம்பரி விரிதிரைக் கடலை வள்ளுவன்
தேம்பொழி துழாய்முடிச் செங்கண் மாலவன்
ஆம்பரி சுலகெலா மளந்து கொண்டநாள்
சாம்புவன் றிரிந்தெனத் திரிந்து சாற்றினான்.

[தேன்சொரிகின்ற துளசியைச்சூடியுள்ள செங்கண்மால், மாவலியினிடத்திலிருந்து தன்னுடையதாகும்படி மூவுலகையும் அளந்துகொண்ட பொழுது, அச்செய்தியைச் சாம்பவான் எங்கெங்கும் திரிந்து பறைசாற்றியதைப்போல இன்றுவள்ளுவன், தாவுகின்ற குதிரைகளை அலையாகவுடைய சேனைச் சமுத்திரத்தைச் சுற்றிச்சுற்றித் திரிந்து இராமன் மணவினைச் செய்தியைச் சாற்றினான்]

நெடியோன் உலகளந்த பெற்றியைச் சாம்பவான் எங்கெங்குந்திரிந்து சாற்றினான் என்பது உண்மையே. பின் கிஷ்கிந்தாகாண்டத்தில் மகேந்திரப்படலத்தில், இலங்கைக்குக் கடல்கடந்து மீளவல்லவர் யாரென உன்னிய காலையில் தன்னாலது ஆகாதென்பதற்குக் காரணங்காட்டுவோனாய்ச் சாம்பவானே,

வேத மனைத்துந் தேர்தரலெட்டா வொருமெய்யன்
பூதல முற்று மோரடி வைத்துப் பொலிபோழ்தியான்
மாதிர மெட்டுஞ் சூழ்பறை வைத்தே வரமேரு
மோத விளைத்தே தாளுலை வுற்றேன் விறன்மொய்ம்பீர்

[வேதங்களுக்கு அகப்படாத மெய்யுருவாய திருமால், பூலோக முழுவதையும் ஓரடியுள் அடக்கி விளங்கிய காலத்தில், நான், எட்டுத் திக்குகளிலும் சுற்றி அப்பெருமையைப் பறையடித்து வரும்வழியில் மேருமலை மோதியதால் இளைத்து மிகவும் வருந்தியுள்ளேன், வெற்றியுடைய வலிமை பொருந்தியவர்களே—ஆதலால் இக்காரியம் என்னால் இயலாது]

எனக் கூறியிருக்கக் காண்கின்றோம். எனினும் இச்செய்யுளின் ஈற்றடியை (சாம்புஅன்று இரிந்து எனத் திரிந்து சாற்றினான்) என்று வேறோர்விதத்தில் பதம்பிரித்து, அன்வயத்தையும் சிறிதுமாற்றினால் எய்துகின்றபொருள் பின்னுமொருபடி சுவைமிகும். உலகங்களையெல்லாம் இரண்டு அடிகளில் அளந்துகொண்டநாளில் தேன்சொரிகின்ற துளசியைச்சூடிய முடியுடைய செங்கண்மால், எவ்வாறு கால்களை இங்கொன்றும் இங்கொன்றுமாய் வைத்துத் தாவினானோ அவ்வாறே வள்ளுவனும், வாவுகின்ற குதிரைகளாகிய அலைகளையுடைய சேனைக்கடலைச் சுற்றித் தாவித் தாவித் திரிந்து, தன்கைப் பறை அன்றோடு உடைந்தேவிடும் என்னும்படி சாற்றினான், என அவன் தாவிச் சென்ற வேகத்தையும், பறையடித்த ஊக்கத்தையும் இயங்கியற் சித்திரம்போல் இப்பாசுரத்துள் அமைத்துக் காட்டுகின்ற காட்சியைக் கண்முன் காணலாம். ஆனைமேல் அணிமுரசறைக என்று அரசன் ஏவினனாயினும் வள்ளுவன் கரியின் மந்தகதிக் காற்றாது சிறிதுதூரம் சென்றதும் தரையிலிறங்கித் தன் கால்களால் தாவியே பறை யிறயிற மோதிச்சாற்றினான். இராமன் மணத்தில் அவ்வள்ளுவனுக்கு இருந்த ஆர்வம் அத்துணை.

மலையென வளரும் வயிரத்தோள் வேந்தனது பெருமிதமும், சாம்பு இரியச் சாற்றிய வள்ளுவன் ஊக்கமும் அன்னவெனின்,

சாற்றிய முரசொலி செவியிற் சாருமுன்
கோற்றொடி மாளிருங் கோல மைந்தரும்
வேற்றரு குமரரும் வென்றி வேந்தரும்
காற்றெறி கடலெனக் களிப்பி னேங்கினார்

[அறைந்த முரசின் ஒலி காதிற் படுவதற்குமுன், அழகிய வளையல்களையணிந்த மாதரும், அழகிய ஆடவர்களும், வேல்பயிற்சியில் வல்ல இளைஞர்களும், வெற்றி பொருந்திய அரசரும், மிகுந்த மகிழ்ச்சியால், காற்றினால் மோதப்படுகின்ற கடல்போலப் பொங்கினார்]

தமதருமந்த இளவரசற்கு நன்மணம் என்னக் கேட்ட நகரமாந்தர் கடலன்ன உவகையாற் பொங்குதல் இயற்கையே. எனினும் பின்,

விடைபொரு நடையினான் சேனை வெள்ளமோர்
இடையிலை யுலகினி லென்ன வீண்டிய
கடையுக முடிவினி லெவையுங் காற்படப்
புடைபெயர் கடலென வெழுந்து போயதே.

[உலகத்தில் இனிச் சிறிதும் இடம்இல்லை என்னும்படி நெருங்கிய, இரஷபத்தையொத்த நடையையுடைய தயரதனது சேனைவெள்ளம், யுகத்தின் முடிவினில் எல்லாப் பொருள்களும் பெருங்காற்றினால் அழிந்துவிட அப்பொழுது தன்னிடத்திலிருந்து பொங்கிவரும் சமுத்திரம்போல, எழுந்து போயிற்று.]



என இவரது எழுச்சிக்குக் கம்பர் கூறுகின்ற வுவமை மங்கள நிகழ்ச்சியோடு ஒவ்வாதிருக்கும் வியப்பிற்கிடனாகின்றது. வானகமும் மண்ணுலகும் உய்யுமாறு இராகவன், திருமகளை வரிக்கும் கடிமணம் காணும் உவகையோடு எழுந்துசென்ற மக்கள்தொகுதியைக் கடையுக முடிவினில் அழித்தற்கெழும் கடலென வழைத்த இதனைப்போன்றே இப்பாலகாண்டத்தில் இன்னும் இரண்டொரு இடங்களில் கம்பர், அமைதியை அயிர்க்குமாறு சிற்சில வுவமைகள் கூறியுள்ளார். முன் அகலிகைப்படலத்தில், விச்வாமித்திரன் இராமனுக்குத் திருப்பாற்கடல் கடையலாயசெய்தியைச் சொல்லிவருகையில், இந்திரன் பவனிவந்த செவ்வியைச் செப்புவானாகி,

தழங்கு பேரியுங் குறட்டொடு பாண்டிலுஞ் சங்கும்
வழங்கு கம்பலை மங்கல கீதத்தை மறைப்ப
முழங்கு நான்மறை மூரிநீர் முழக்கென வுலகை
விழுங்கு மாவரும் விழாவணி கண்டுளம் வியந்தான்

[ஒலிக்கின்ற பேரிகையும் குறடும் தாளமும் சங்கும் செய்த மங்கல ஓசைப்பாடல்களை முழங்குகின்ற நால்வேத கோஷங்கள் மறைக்க, உலகை விழுங்குவதற்கு எழும் சமுத்திரத்தின் பேரொலியோடு வரும்விழாவின் சிறப்பைக்கண்டு தூர்வாசமுனிவன் மனங்களித்தான்]

என்று காட்டினான். விழாவணிச் சிறப்பை, உலகை விழுங்குமா வரும் மூரிநீர் முழக்கினோடு உவமத் தொடர்பினும் சேர்த்திருத்தல் செவ்விதென மதித்தலருமை. எனினும், இது கவிக் கூற்றன்று. தூர்வாசனது சாபம் வந்து பற்றஇருத்தலால் அதனைக் கருத்துட்கொண்டு கூறுகின்ற கோசிகன் வாயில் அவனை அறியாமலே இவ்வுபமானம் வந்ததெனக் கொள்ளின், அது ஒருவாறு அமைந்து, ஆனந்தக்குற்றத்தினின்று காக்கப்பெற்றதாகலாம். மற்று, பின் நீர் விளையாட்டுப் படலத்தில் கம்பரே,

அங்கவர் பண்ணை நன்னீர்
ஆடுவான் அமைந்த தோற்றம்
கங்கைவார் சடையோன் அன்ன
மாமுனி கனல மேனாள்
மங்கையர் கூட்டத் தோடும்
வானவர்க் கிறைவன் செல்வம்
பொங்குபாற் கடலிற் செல்லுந்
தோற்றமே போன்ற தன்றே

என்னுங்கால் காதலும் உவகையும் உந்தப் பொய்கை நீர் ஆடப்புகுந்த இச் செல்வமக்களைத் தூர்வாசன் சாபம் சுமந்துசென்று பாற்கடலுள் மறையப்போன வானவர்க்கிறைவன் செல்வத்தோடு சேர்த்துச் செப்புகின்றார்.

இவ்விதம் மிகுதியை மாத்திரம் மனத்திற்கொண்டு, ஆக்கமுடைய விடங்களில் அழிவுதரும் நிகழ்ச்சிகளைக் குறித்தது ஏனெனக் கம்பரைக்கேட்டால் என்ன காரணம் எடுத்துக் காட்டியிருப்பார் என்று ஊகிப்பது அருமையாயிருக்கின்றது. குற்றமே கூறினார் என்னத் துணிதவன்முன் நம்மனோர் நிலையையும் மறத்தல் ஆகாது.

# பழமுதிர்சோலை.

## வானம்பாடிக் குரைத்த வார்த்தை.

கற்பகக் காவினு மிலக்கியச்சோலை நலம்பெரிதுடையது. வேண்டிய இவையென இரந்தாலன்றி நல்காதொன்றுங் கற்பகம். மற்றுக் காவியத் தருக்களோ, வேண்டுதற்குரியன எவையெனத்தாமே வுரைத்து, அவ்வுரை தூண்டிய வேட்கை மீதூர நின்றார்க்குச் சுவைதொறும் சுவைதொறும் இனிமை கைம்மிக உயிரிற்கே உணவாய நன்கனி சொரிந்தளிக்கும் நீர்மையன. ராபர்ட் பர்ன்ஸ் என்னுமவ் வாங்கிலப் புலமையோன் புகலாமுன்னம், வயலெலியொன்றினோடு தன்னை ஒப்புக் காணவேண்டுமெனும் விருப்பம் யார்க்கே உதித்திருக்கக் கூடும். அவன், சென்றதற் கிரங்கி நாளைச் சேர்வதற் கஞ்சிநிற்கும் சிறுமானுடர்தம்மில், அன்றன்று செய்தியல்லா லயலொன்றாய்தல்செல்லா எலிகளின் வாழ்நாட் சிறப்பை விளக்கிய உண்மையால், "நம்மனோர் எற்றே இவ்வெலிக்கெதிர்" என்னும் அறிவின் பழத்தை மனத்தகம் கனியப் பெய்தனன். தீங்கனி திரட்டி வைத்த இக் கலாநிலயப் பத்திரத்தினின்று முன் (முதல் வால்யூம், 157-வது பக்கம்) அதனைப் புசித்துள நண்பர்காள், இன்று வோர்ட்ஸ்வோர்த் என்ற வேறோர் ஆங்கிலக் கவிஞன், "வானம்பாடிக் குரைத்த வார்த்தை"யையும் கூட்டுண வம்மின்!

கூவியெழுந் துயர்தரவோங்கிய வோர் பறவையின் காகளங்கேட்டுக் கூறுவா னன்னான்:—

"அம்பர வாண, விசும்புறு வியவ! பருவரல் கெழுமிய மண்ணிலத்தன்னை வெறுத்தனை போலும்! சிறகுக ளவைதாம் மேன்மே லுயரும் ஊக்கமுடையன. மற்றுன் கண்ணுங் கருத்தும் தரையினிலுள்ள குரம்பையுள்ளே தங்குவ கொல்லோ! ஆயினும் என்! விதிர்க்கும்பின் இறகுகள் குவித்து, இசையையுஞ் சற்று நிறுத்தினையாயின், நினைத்தபோழ்து நீ இறங்கி இச்சாலகமதனுள் வீழ்வா யன்றே!"

"ஆதலின், தனிவுடை விசையோய், காட்சியின் எல்லைக்கோடிவை எட்டியும் அப்பாற்கடக்கும் உயரக் கடவாய். தூண்டிய அன்பினாலெழுந்தவவ் வின்னிசை. நின்னையு முன்னுடை மனைவியொடு பார்ப்பையும் பிணித்திடுமோர் பிழையிலாப் பாசமு மதுவே. 'பார்ப்பினைப் பயில்தரும் குரலே யாயினும், அவ்வொலி) இத்தாழ்நில வரைப்பின் மார்பக முருவிக் கிளர்த்ததனி லொன்றுங் குறைந்திலது கண்டாய். எனினும், இலையொடுதளிரும் நிரம்பிய இளவேனிற் காலத்திற்கு அடங்குதலின்றிப் பாடுமிவ் வுரிமையின் பெருமை நினதே, பறவாய்!"

"நிழலிருள் பொழிலெலாங் குயில்களே குடிகொள்ளட்டும், விட்டிடு! திப்பிய உணர்வில் நீயே மிகுந்தனை! சோதி மகிமையி னோர் மறைவிடம் பெற்றனை! மீமிசை நின்றவ் விசையின் வெள்ளம் பூமியின்மீது பொழிவாய், பறவாய். துறக்கப் பேறும் மனையுறை வாழ்வும் தொடர்புடைக் குறிகள் இரண்டெனவமைத்து நேரே யுயர்வார் அல்லால் திரிதலுந் துழல்தல் செய்யார் அறிஞர் என்பார்! அவரே போல்குவை பறவாய் நீயே!"

இம்மைக்கியன்றது இல்லற வின்பம். அவ்வின் பத்தினைவது மெய்யுடை யன்பு. மனைவிக்கு மக்களுக்கு மென்று சரக்கு மவ்வன்பே உலகமின்புற இசைபடும் வாழ்வு. அவ்வாழ்வின் நோக்கம் மறுமைப் பேறு. மனைக்கும் மறுமைக்கும் நேரே உயரும் நெறி யிது. வேறு சில நாடித் திரிவதெவன். குரம்பையுள்கருவை அன்பால்தேற்றக் கூவிக்கூவி மேலுற நோக்கிப்போயது வானம்பாடி. அவ்வன்பின் ஒலி கேட்டு மற்றவரும் இன்புறுவர். அதற்குக் குயிலைப் போல் காலமொன்றில்லை. குயில்தான் அயல்கூண்டின் கருவுயிர்த்துத் திரிதலையுந் தன்மையதாதலால் அதற்கு மனையன்பு இல்லை. உயரவும் பறந்திலது. ஒளிக்குரிய தாயிற்றில்லை. வேனிலொடு அந்து பொதும்பர்புக் கிருந்துபோவதே அன்பிலாக் குயிலின் கதி.

"ஆழி"

## எம் சொந்தப் பிரசுரங்கள்.

சிறுவர் சிறுமியர்களுக்கு நல்ல தமிழில் எளிய நடையில் உயர்ந்த விஷயங்களைப்பற்றிஎழுதியுள்ள புத்தகங்களை வாங்கிக்கொடுத்து வாசிக்கச் செய்வது நலம். அதற்கு ஏற்ற புஸ்தகங்கள் இவை:—

**கோபால் புதிய தமிழ் வாசகம்.**

ஆ. மா. ஸ்ரீ இராகவன் B.A., L.T., எழுதியது.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 1-ஆம் வகுப்பு | 0 | 2 | 6 |
| 2-ஆம் வகுப்பு | 0 | 3 | 0 |
| 3-ஆம் வகுப்பு | 0 | 4 | 0 |
| 4-ஆம் வகுப்பு | 0 | 4 | 6 |
| 5-ஆம் வகுப்பு | 0 | 6 | 0 |
| ஆஞ்சனேயர், பண்டிதர் - ம. குப்புசாமி முதலியார் எழுதியது | 0 | 5 | 0 |
| சிறுமணிக் கதைகள், எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியது | 0 | 5 | 0 |
| கம்பர் அல்லது கவியரசு, பண்டிதர் - அ. ரா. கன்னையா எழுதியது | 0 | 5 | 0 |
| சிறுவர்களுக்கான இந்துதேச சரித்திரம், வி. ஜயராமய்யர் B.A., L.T., எழுதியது | 0 | 5 | 0 |
| ஸிவிக்ஸ் அல்லது துரைத்தன விளக்கம் எஸ். சுப்பிரமணிய அய்யர் B. A. எழுதியது | 0 | 5 | 0 |
| தமிழ்ச் சிற்றிலக்கண வினாவிடை, பண்டிதர்-கா. ரா. கோவிந்தராஜ முதலியார் எழுதியது | 0 | 4 | 0 |
| கோபால் வாய்ப்பாடு | 0 | 1 | 0 |
| புத்திமானே பலவான், (7-ம் பதிப்பு) வ. பரசுராமய்யர் எழுதியது. | 0 | 10 | 0 |
| கிருஷ்ணதேவராயர், கே. பி. சேஷாத்திரி ஐயங்கார் எழுதியது | 0 | 8 | 0 |
| பகீரதன், பண்டிதர் அ. ரா. கன்னையா எழுதியது | 0 | 6 | 0 |
| பத்திராயு அல்லது ஆட்சிக்குரியோன், பண்டிதர் - மே. வீ. வேணுகோபால பிள்ளை எழுதியது | 0 | 6 | 0 |
| சூரவாதித்த சோழன், பண்டிதர் - ஆர். எஸ். சாம்பசிவசர்மா எழுதியது | 0 | 12 | 0 |
| இலங்கேசன், Y. சீனுவாஸய்யர் எழுதியது | 0 | 6 | 0 |
| முசுகுந்தன், திரு. மாணிக்கவாசகர் எழுதியது (அச்சில்) | 0 | 6 | 0 |

**English publications.**

| | | | |
|---|---|---|---|
| English Selections for Higher Forms by P. S. Sivaswami Iyer. B.A., L.T., | 0 | 12 | 0 |
| Nanda the Paraiah Saint by C. S Rangaswami Iyengar B.A., L.T., | 0 | 3 | 0 |
| Fables from Mahabharata. by Paramasiva Iyer. B. A., L.T., | 0 | 3 | 0 |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

வேண்டும் புத்தகங்களுக்குக் கீழ்கண்டவிலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**B. G. PAUL & Co,**

**Publishars**

**Francis Joseph Street, Madras.**

## அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீன அற்புத சஞ்சிகை வாசிப்பவ மனத்தைக் கவரத்தக்கதாய் இதுவரையில் தமிழில் வெளிவந்ததில்லை. ஜாதிமத வித்தியாசங்களின்றி யாவரையும் களிக்கச்செய்யும் வியாசங்கள் கொண்டது. பிரதி மாதமும் 56 பக்கங்களுடன் வெளிவரும்.

வருஷ சந்தா ரூபா 1. வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனம்.

10-ம் பதிப்பு] [வந்து விட்டது

## ஆங்கில ஆசான்

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்துவாங்குங்கள்.

60-நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடிய விதமாய் அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுள்ளோம். இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான்போல் வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாது. நமது முன் பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்கவேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணு முதல் 3000-ரூபா வரையில் சம்பளம், வாடகைக் கணக்கு உளது. 800-பக்கங்களுக்கு மேல் கொண்ட அழகிய சிமைகலிகோ பைண்டு விலை ரூபா 2.

தி. இராஜகோபால் முதலியார், 302,

தங்கசாலைவீதி, மதராஸ்.

## Our Publications.

**Kamban's Kosala.**

By T. N Seshachalam: A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation, Price Re. 1.

**Thoughts for Statesmen**

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville and Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book Price Rs. 1-8-0.

மேனாட்டுப் பேரறிஞர் நால்வர்.

கார்லைல், எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய் இவர்தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்.

கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங் கவிகள் ஜீவிய சரிதை. விலை அணு 4.

உலக அதியசம். விலை அணு 4.

விசித்திர விளக்கு.

எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணு 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணு 4.

Sambandar (English) விலை „ 4.

Vali (Do) விலை „ 4.

**The Educational Publishing Co.,**

**Nungambakam, Madras.**




## வர்த்தமானம்

லண்டனில் புத்த ஜயந்தி.—லண்டனில் 24ந்தேதியன்று புத்தஜயந்தி கொண்டாடப்பட்டது. இக் கொண்டாட்டத்தின்தலைவரான பிரான்ஸிஸ்பெயின் என்பவர் இந்தியா மேல்நாட்டிற்குச் செய்த உதவிகளில் புத்தர் மதத்தைத் தந்தது ஒன்றாகும் என்று கூறினார். புத்த விக்ரஹத்திற்குப் பூசை செய்யப்பட்டது. இதற்கு ஆங்கிலேயர் பலர் வந்திருந்தனர்.

***

பிரான்ஸில் பட்டம் அளித்தல் நின்றது:—இனி யாருக்கும் மார்ஷல் பட்டம் அளிக்கப்போவதில்லை என்று மந்திரிசபையார் முடிவு செய்தனர். யுத்தசமயம் அரிய சேவை செய்தவர்களுக்கென்று அளிக்கப்பட்ட இப்பட்டம் சமாதானமான காலத்தில் தேவையில்லை என்று கருதப்பட்டது. இப்பொழுது மார்ஷல் பட்டம் பெற்றவர்களில் நால்வர்தான் உயிரோடிருக்கின்றனர்.

***

துணி பகிஷ்காரம்:—சென்றவாரக் கடைசியில் பம்பாயில் அன்னியத்துணி பகிஷ்காரக் கமிட்டியின் கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது காந்தி அடிகள், பகிஷ்காரவேலை மிகவும் ஊக்கமாய்ச் செய்ய வேண்டுமென்றும், அதற்கான வேலைத்திட்டம் வேண்டுமென்றும் கூறினர். காந்தியடிகள் அபிப்பிராயத்தை ஒட்டிப் பகிஷ்காரத் தீர்மானம் செய்யப்பட்டது

***

அமனுல்லாக்கான்:—ஆப்கன் அமீராயிருந்த அமனுல்லாக்கான் இத்தாலிக்குச் செல்லப் பிரயாணமாய்க் கராச்சிவந்துள்ளார். இவர் சமீபத்தில் பாச்சா சாக்கோவின் படையுடன் எதிர்த்ததில் தோல்வி ஏற்பட்டதாகத் தெரிகிறது. இனி அவர் இழந்த பட்டத்தைப் பெற முயல்வாரா என்று தெரியவில்லை.

***

ஆத்தங்குடி முத்துப்பட்டணம் 8-வதுஆண்டுவிழா:- நாவுக்கரசு நற்சபையின் மூன்றாவதாண்டு விழா சென்றவாரம் காந்திவிலாசத்தில் காரைக்குடி 'ஊழியன்' பத்திராதிபர் திரு. ராய. சொக்கலிங்கம்செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாணவர்களும் மதுரைத் தமிழ் பண்டிதை எஸ் வேலுத்தாயம்மையும் ஸ்ரீ பொன்னம்பல சிவம் அவர்களும் பேசினர். தலைவர் முடிவுரை கேட்பதற்கு இனிமையாய் இருந்தது. காரியதரிசி இ. த நாராயணசெட்டியார் வந்தனங்கூறக் கூட்டம் நிறைவெய்தியது.

***

லேட்சிமிபுரம் சோ. வித்தியாசாலை:- இச் சங்கத்தின்நாலன்காவதாண்டு இரண்டாவது மாதக் கூட்டம் சென்றவாரம் வியாழக்கிழமை பகல் 4. மணிக்குச் சொக்கலிங்கவித்தியாசாலையில் திருவாளர். தில்லைநாத நாவலர் அவர்கள் தலைமையில் கூடியது. தலைவரவர்கள் "கற்றதனாலாய பயன்" என்ற விஷயங்குறித்து நீண்ட நேரம் பேசினர். பின்பு. சு. சுந்தரன் "மாணிக்கவாசகர்" என்ற விஷயம்பற்றிப் பேசியதும் தலைவரவர்கள் முடிவுரைகூற மாணவிகள் மங்களவாழ்த்துப் பாடச் சபையோருக்கும் தலைவரவர்கட்கும் காரியதரிசி ஸ்ரீமான் N. S. A. R. அருணசலம் செட்டியார் வந்தனோபசாரம்கூறச் சபை இனிது நிறைவெய்தியது.

***

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி:—சென்றவாரம் சனியன்று பம்பாயில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் கூடியது. காங்கிரஸில் இருந்து அதற்கு விரோதமாய் வேலை செய்பவர்களின்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று ஒரு பிரயத்தனம் செய்யப்பட்டது.

காங்கிரஸ் மான்யூல் என்று ஒரு புத்தகம் எழுத வேண்டுமென்றும், அதில் அரசியல் விஷயங்களைப்பற்றியும், இந்திய சுயராஜ்ய அமைப்பையும் வெளியிட வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஸ்ரீமாளவியா இதை ஆதரித்துப் பேசினார்.

***

பொதுவியல்:—உண்டதும் படுக்கை கொள்ளல் தவறு. வாய்திறந்து உறங்கல் நோய்தரும் மார்க்கம். இரவில் தூக்கம் எண்மணி நேரம். ஏற்கா நாடகம் இடுக்கண் தருமே. ஒருநாள் விழிப்பு பலநாள் நோய் தரும். மலச்சிக்கல் நோயே மாற்றான் நமக்கு. கல்கரி மணலால் பல்துலக்காதே. காலையிற் குளித்தல் சாலச் சிறப்பு. சுத்த ஆடையே சுகாதாரம். இருட்டினுந் தூரமும் செருப்பணிந் தேகு. உண்டதும் பலவடி உலாவுதல் நன்று. களைப்பு இல்லாவிடில் பகற்றுயில் களைக நடுப்பகல் தன்னில் தலைக்கு இட்டுஏகுக. நோயாளிக ளெனில் பேயென விலகுக. உண்டு முடித்ததும் உடன் நீராடேல். ஈகொசு மூட்டை எலிகளைத் துரத்து. செள்ளுப் பூச்சியைச் சீக்கிர மகற்று. களியாட் டங்களைக் கனவினுங் கருதேல். திடம்பெற விரும்பினல் தேகப்பயிற்சி செய். கதிரவ னொளி கட்டாயம் வேண்டும். மனச் சந்தோஷம் வாழ்வைப் பெருக்கும். தாதுவைக் காத்தல் தக்கோர் செய்கை. மாதத்திலோர்நாள் மங்கையினுறவுகொள். நன்னடை யொழுங்கிற் பின்னடைந்து ஒழுகேல். நித்தமுங் கடவுளைத் தொழுதலும் மறவேல்.

திரு. லெ. சோமசுந்தரஞ்செட்டியார் இயற்றிய சுகவழி முற்றிற்று.

***

சமஸ்தானக்குடிகள் மஹாநாடு:- இம்மாதம் 26ந் தேதியன்று பம்பாயில் சமஸ்தானக்குடிகள் மஹாநாடு ஸ்ரீமான் C. Y. சிந்தாமணியின் தலைமையின்கீழ் கூடியது. சமஸ்தான விஷயமான திருத்தங்களைப்பற்றித்தீர்மானிக்கவென்றுவந்த பட்லர்கமிட்டியைக்கண்டித்துப் பின்வரும் யோசனைகளைத் தலைவர் கூறினார்?

பேசும் சுதந்திரம், எழுதும் சுதந்திரம் பாதிக்கப்படல் கூடாது. இதற்கானவிதிகளைச் சமஸ்தான அரசாங்கத்தார் செய்யவேண்டும்.

நீதி இலாக்காவும், நிர்வாக இலாக்காவும் பிரிவினை செய்யப்படவேண்டும்.

பிரிட்டிஷ் இந்திய சட்டசபைக்குள்ள அதிகாரம் பெற்ற சட்டசபை ஒன்று சமஸ்தானங்களில் ஏற்படவேண்டும். சபை அங்கத்தினர் தேர்தலில் தெரிந்தெடுக்கப்பட வேண்டும்.

அரசருக்கெனப் பணம் ஒதுக்கிவைக்கப்பட வேண்டும் பொதுப் பணத்தில் அரசர் செலவிற்கு எடுத்துக்கொள்ளக் கூடாது.

எங்கும் பஞ்சாயத்து சபை ஏற்படுத்தவேண்டும். ஆரம்பக்கல்வி இலவசமாய்த் தரல் வேண்டும். வயித்தியவசதி பெருகவேண்டும். மாகாண அரசாங்கத்திற்கும், சமஸ்தானம் மத்திய கவர்ன்மெண்டிற்கும் ஏற்படும் தகவல்களை விசாரித்து முடிவுகூற ஒருமத்தியஸ்த சபை வேண்டும்.

இத்தகைய திருத்தங்களை உடனே செய்ய வேண்டும்.

KALANILAYAM.
REG. NO. M. 2324.

A MOMENTOUS BOOK

# ANCIENT JAFFNA

BY

**Mudaliar C. RASANAYAGAM, C. C. S.**

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

**Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.**

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

**Price Rs. 5-8-0 (V.P. Charges extra)**

*MANAGER:—*

***"KALANILAYAM"***

*11, VELLALA STREET.*

**Purasawalkam MADRAS**

---

**1928**-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும் | *கலா நிலயம்* | செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

*சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும். T. P. மீனாட்சிசுந்தரம் M. A. B. L.—51 கட்டுரைகள்.*

2. கம்ப இராமாயணம்

*பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை—T. N. சேஷாசலம், B. A. B. L. 51 கட்டுரைகள்.*

3. அகப்பொருள் வரலாறு

*காட்சிமுதல், ஒதற்பிரவு வரை—K. இராமரத்னம் ஐயர் B. A. 18 கட்டுரைகள்.*

4. காந்திமதி

*காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல். T. N சேஷாசலம் B. A. B. L. 51 இதழ்களில் வந்துளது.*

5. தமிழ்ப்பாடம்

*நளவெண்பா,—சுயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.*

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்

*பிரிடரிக் கிஷேன் எபிகுயூரன் ஜினோன் பைரோன் அரிஸ்டால் முதலாயினோர்—T. R. இராஜகோபால்,*

7. இலகிய எற்ற ஆராய்ச்சி

*E. T. சொக்கம்மாள் B. A; L. T. எழுதியது 6 கட்டுரைகள்.*

8. தேவாரமும் ஐந்திணையும்

*தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்—E. N. தணிகாசல முதலியார் B. A. B. L. 8 கட்டுரைகள்*

9. மேனாட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)

*கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட்பர்ன்ஸ் முதலாவினோர்.*

10. இலக்கியக் கதைகள்

*புரந்தனூர் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.—R. முத்தையர்*

11. வானசாஸ்திரம்

*இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.—20 கட்டுரைகள்.*

மலர்வனம் பழமுதிர்சோலை

*சிந்தாமணி,சிலப்பதிகாரம்,மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுனூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்—14 கட்டுரைகள்.*

*காலடி நானூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்காயம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.*

| | | | |
|---|---|---|---|
| விலை விபரம்—தபால் செலவு உள்பட:— | *பையின்டு செய்யாதது* | *உள்நாடு* ரூ 8—0—0 | *வெளிநாடு* ரூ 9—8—0 |
| | *ஆப்லெதர் கில்டுபயிண்டு* | *உள்நாடு* ரூ 10—0—0 | *வெளிநாடு* ரூ 11—8—0 |
| | *காலிகோ பயிண்டு* | *உள்நாடு* ரூ 9—8—0 | *வெளிநாடு* ரூ 11—0—0 |

*கலா நிலயம் ஆபீஸ்*, 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E Kumariah, B.A., B.L. (Editor)